விலை : ரூ 5.00

# இந்து கலா சாரம்

## இந்து சமய திங்கள் வெளியீடு

கௌரவ ஆசிரியர்; திரு. ஆர். வைத்திமாநிதி

மலர் : 2 ★ திருவள்ளுவர் ஆண்டு 2021 பங்குனித் திங்கள் முதலாம் நாள் (15-03-1991) ★ இதழ் : 11

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கொருமுறை தோன்றி மறைகின்ற ஞானாசிரியனாக எமது வாழ்நாளில் நாம் கண்ட அருட்துறவியும் தெய்வீக புருஷருமான, திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகர் குருமணி ஸ்ரீமத் கங்காதரானந்தா அவர்களின் சிவசாயுச்சிய சமாதிக்கு நாம் செலுத்தும் பணிவார்ந்த அஞ்சலியின் நிமித்தம் இவ்விதழை சுவாமிஜி அவர்களின் தெய்வீக பாத கமலங்களில்—

கொழும்புத் தமிழ்ச்
வரை நிலைச் சபை,
73
பதிவு இல. 10. 5. 1950



அர்ப்பணம் செய்கின்றோம் !

# நமது நோக்கு

ஒரு மகாஞானியின்

## பாதகமலங்களில்....!

பாரதத்தின் அடிச்சுவடு போலத் திகழும் இலங்கை ஒரு புண்ணிய பூமி! பாடல்பெற்ற தலங்களும், கதிர்காமம் போன்ற அருட் ஷேத்திரங்களும் இந்த சிறிய தீவுக்குள்ளே அடங்குகின்றன. அதனால் தானோ என்னவோ இந்தப் பரந்த உலகின் ஆன்மீகத் தேடலுக்கும், நெஞ்சின் நிறைவுக்கும் இங்கிருந்து ஞானக்கதிர்கள் புறப்பட்டுக்கொண்டே இருந்திருக்கின்றன.

அத்தகைய கதிர்பரப்பும் ஞான சூரியனாக திருகோணமலை எனும் புனித தலத்திலிருந்து பிரகாசித்துக்கொண்டிருந்தவர் மாதவ சிரேட்டர் ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்கள்.

பூர்வாசிரமத்திலே, பாரத மண்ணின் கேரளத்தைச் சார்ந்தவராக இருப்பினும் இலங்கைக்கு வந்து தனது ஞானாலயமாக திருகோணமலையைத் தேர்ந்தெடுத்து, நாற்பது வருடங்களுக்கும் மேலாக சிவயோக சமாஜம் எனும் ஆசிரமத்திலிருந்து அருளாட்சி செய்து வந்திருக்கின்றார்.

சுவாமிஜி அவர்கள் சமாதி ஆகும்வரை எவ்வித விளம்பரமுமின்றி அரும்பெரும் அற்புதங்களை ஆற்றியுள்ளார். தன்னைச் சரணடைந்தோருக்கு லௌகிக வாழ்வில் நிறைவு தந்ததோடு ஆன்மீக உயர்வின் வழிகாட்டியாகவும் திகழ்ந்த மகாஞானி அவர்.

சுவாமிஜி அவர்களின் மகாசமாதியின் பின்னர் எமது நாட்டுக்குள்ளேயே வாழ்ந்த ஒரு ஞானகுருவைப் பற்றி அறியாமல் விட்டுவிட்டோமே என்று ஆயிரக்கணக்கானோர் அங்கலாய்க்கின்றனர்; ஆதங்கப்படுகின்றனர்.

அனைவருக்கும் சுவாமிஜி அவர்களின் பிரதம சிஷ்யரான ஸ்ரீமத் ஜெகதீஸ்வரானந்தா அவர்கள் கூறும் செய்தி மகிழ்வுதரக்கூடியது. சுவாமிஜியின் சரீரம் மறைந்ததே ஒழிய அவர்தம் சைதன்ய சக்தி எங்கும் வியாபித்திருக்கிறது என அவர் பலதடவைகள் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீமத் கங்காதரானந்தா என்ற ஆன்மீக ஆலவிருட்சத்தைப்பற்றி அனைவரும் அறியவும், இடருறும் மனங்களிலெல்லாம் அமைதி நிறையவும், இவ்விதழ் பயன்பட வேண்டுமென இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம். மிக உயர்வான ஒரு கைங்கரியத்திற்காக இந்து கலாசாரம் பயன்படக் கிடைத்தமைக்காக எமது மனமார்ந்த வணக்கங்களை இறைவனிடம் சமர்ப்பிக்கின்றோம்.

## சைவராத்திரியும் சமணராத்திரியும்

எமது கோவில்களுக்கு யாரும் வரலாம் எமது பூஜைகளில் யாரும் கலந்து கொள்ளலாம்.

இதில் எந்தவித தவறுதலும் இல்லை, இன்றைய பொருளாதார, கலாசார நடைமுறை வாழ்க்கை அமைப்பில் இது தவிர்க்க முடியாதது.

— ஆனால் —

நமது கோவில்களில் நடக்கும் பாரம்பரிய பூஜைகளிலும் சம்பிரதாயங்களிலும் மற்றையவர்களின் பூஜைகளையும் சம்பிரதாயங்களையும் நமது வழமைகளோடு ஈடுபடுத்தி சமரசப்படுத்துவது யாராலும் ஏற்றுக் கொள்ளமுடியாத விஷயமாகும்.

இப்படியான நிகழ்ச்சி கடந்த சிவராத்திரியன்று கொழும்பு மாநகரிலே நடந்தேறியது மனதிற்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது.

வினைதீர்க்கும் விநாயகர், வரதராஜப் பெருமான் தனது நான்கு ஜாமப் பூஜையில் ஒரு ஜாமப் பூஜையின் போது மிகவும் சிரமத்தோடு பொறுமையாகவும் மவுனமாகவும் இருந்து விட்டார்,

பக்தர்களுக்கு மனம் குழம்புகின்றது, வேதனையாக இருக்கின்றது. தவிர்க்க முடியாத பல காரணங்கள் இருந்து இருக்கலாம் என்றாலும் முழு முயற்சியோடு தவிர்த்து இருக்க வேண்டும்.

இந்துத் தத்துவத்தின்

## ஒன்பது மணிகள்


நமது மதம் என்ன சொல்கிறது என்று தெளிவின்றி இருப்போர்க்காக மிக இலகுவான சில சிந்தனைகள்.—

1. சர்வ வல்லமை மிக்க சர்வ வியாபியான, முற்றும் உணர்ந்த ஒரு இறைவன் இருக்கிறான்.
2. ஒவ்வொரு உயிரும் இறைவனை நோக்கிய பயணத்தை மேற்கொள்கிறது. அங்ஙனம் இறைவனுடன் இரண்டறக்கலக்கும் நிலையை மோட்சம் என்கிறோம்.
3. உயிர்களின் கர்ம வினைகளுக்கேற்ப அவை மீண்டும் பிறந்தே ஆகவேண்டும்.
4. கர்மவினைகள் நல்லவையோ தீயவையோ அவை எமது சிந்தனை, சொல், செயல் என்பவற்றால் ஒவ்வொரு கணமும் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன.

( தொடர்ச்சி 12ம் பக்கம் )

# புன்முறுவலால் பக்தர்களை ஈர்த்த ஞானி

— நா. மாணிக்க இடைக்காடர் —



அவதார புருஷர்களும் ஞானிகளும் மின்னல் போல் தோன்றி மறைந்து விடுவார்கள். இவர்களில் சிலரை இவர்கள் வாழ் நாளில் மக்கள் இனம் கண்டு கொள்வார்கள். மற்றவர்களை மறைந்த பிறகு தான் மக்கள் அறிவார்கள். இராமபிரான் விஷ்ணுவின் அவதாரமென்று இராமரின் வாழ்க்கையில் ஆக 12 பேருக்குத்தான் தெரிந்ததென்று இராமாயணம் கூறுவது என் ஞாபகத்திற்கு வருகிறது. இப்படிப்பட்ட நிலையை அவதானிக்கும் பொழுது எங்கள் சுவாமி கெங்காதரானந்தரை அவர் வாழ்நாளில் நாங்கள் ஒரு பெரிய ஞானியென்று இனம் கண்டு கொண்டது இலங்கை வாழ் இந்து மக்களுக்கு ஒரு பெருமைக்குரிய விடயமென்று கருதலாம்.

சுவாமிகளின் அறிமுகம் எட்டு ஒன்பது ஆண்டுகளுக்கு முன் திருமதி. கனகசிங்கம் மூலம் எங்கள் குடும்பத்திற்கு கிடைத்தது. பழகப் பழக இன்னும் பழக வேண்டுமென்ற ஆவல் எங்களுக்கு வந்தது. இதனால் எப்பொழுது திருமலையிலிருந்து கொழும்பு வருவார் என்று எதிர்பார்ப்போம். எங்களைப் பொறுத்தவரையில் சுவாமிகளை நாங்கள் கண்டது தரிசனத்துக்கு மாத்திரம். இது கைகூட வேண்டும். அது கைகூட வேண்டுமென்று ஒரு பொழுதும் நாங்கள் கேட்கவில்லை. ஞானிகளை உலக வாழ்வு முன்னேற்றத்திற்கு ஏதாவது கேட்பது அறிவின்மை. இவர்களை எப்படி எங்கள் ஆத்மீக வாழ்வை வளர்க்கலாமென்று தான் கேட்கவேண்டும் ஆனால் சுவாமிகளோ எல்லாம் தெரிந்தவர் ஆகையால் சில்லறை விடயங்களைப்பற்றி கேட்பவர்களுக்கு அவர்களுக்கு திருப்தி அளிக்கக்கூடிய முறையில் அறிவுரை வழங்கினார். என்னை பொறுத்த மட்டில் சுவாமிகளின் தரிசனமே எனக்கு போதுமானது. தட்சணாமூர்த்தி போல் மௌன உபதேசம் கொடுத்தார். இந்தப் பாக்கியம் எங்களுக்கு இன்னும் சில காலத்திற்கு கிடைக்கவில்லையேயென்று தான் கவலை.

சுவாமிகளின் ஞான மண்டலத்தை தினமும் நான் வாசிப்பேன். வாசிப்பது சுலபம். ஆனால் அதன்படி ஒழுகுவது தான் கஷ்டம். எனினும் நான் முயற்சி செய்து அவர்களின் ஆத்மீக அறிவுரையின்படி வாழப் பார்க்கிறேன். பல பக்தர்கள் இது போன்ற நூல்களை வாசித்து பலன் பெறுவதாக நான் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

சுவாமி அவர்கள் சமாதி அடைந்து விட்டார். ஆனால் அவர்களின் அறிவுரைகள் எப்பொழுதும் இருக்கும். அவருடைய பிரதம சீடன் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா, சுவாமி அவர்கள் தொடக்கிய நற்பணிகளை தொடர்ந்து செய்வதற்கு பக்தர்களாகிய நாம் உதவி ஒத்தாசை கொடுக்க வேண்டும். சுவாமி அவர்கள் உயிருடன் இருக்கும் பொழுது எப்படி பஜனைகளைத் வைத்து கடவுளை வணங்கினோமோ, அதே போல் தொடர்ந்து செய்வது தான் சுவாமிகளுக்கு நாம் செய்யும் கைமாறு என்று கருதுகிறேன்.

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

---

●● பிரமதேவனிடத்தில் ஒருவர் சென்று அடுத்த ஜென்மத்தில் தான் ஒரு கோவில் பூசாரியாக பிறக்க வரம்தர வேண்டுமென்று பிரார்த்தித்து நின்றார் பிரமா கேட்ட வரத்தை அளித்தார். வரம் வாங்கி விடை பெற்றுச் செல்லும் பொழுது அந்தரங்க சுத்தி இல்லாமல் பூஜா காரியங்கள் செய்யுமாகில் அதற்கடுத்த ஜெனமம் நாயாகப் பிறப்பாய் என்று பிரமதேவர் ஒரு எச்சரிக்கையும் பண்ணி விட்டார் என்பது ஒரு கதை. ஆலய சம்பந்திகள் சித்த சுத்தியுடன் ஆலய கருமங்கள் செய்யாவிட்டால் பாவ ஜென்மம் எடுக்க வேண்டிவரும் என்பதே கதையின் உட்பொருள் என்ன ஜென்மம் வந்தாலும் பரவாயில்லை. இப்பொழுது இப்படியே நடக்கட்டும் என்று நினைப்பவர்களைப் பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை.

— ஸ்ரீமத் கங்காதரானந்தாஜி

---

# பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!

— பேராசிரியர் கா. சிவத்தம்பி —

யாழ்ப்பாணத்தின் இந்துமதப் பண்பாட்டில் அண்மைக் காலத்தில் இரு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

ஒன்று இந்துக்களால் வழிபடப்பெறும் ஒரு பெண் தெய்வத்தின் வழிபாடு பற்றியது; மற்றது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கோயில் முகாமை பற்றியது.

இந்த இரு மாற்றங்களையும் விவரிப்பதன் முன்னர், இந்த இரு மாற்றங்களும் ஒரு தளத்தையே மையமாகக் கொண்டவையாகவும், ஒருவரையே உந்து சக்தியாகக் கொண்டனவாகவுமுள்ளன என்பதைச் சொல்ல வேண்டும். தளம்,யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் கோயில், உந்துசக்தி, தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்கள்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்ற ஒரு தமிழாசிரியையின் ஆன்ம யாத்திரையினூடாக, அவரது புலமை முதிர்ச்சியின் வழியாக, அவரை வழி நடத்தும் சமூக - மத தரிசனத்தினூடாக இந்த இரு மாற்றங்களும் நிறைவேறியுள்ளன.

இந்துமதப் பாரம்பரியத்தில் துர்க்கை, நல்லவை அல்லாதவற்றைத் தாட்சண்யமின்றி அழிப்பவளாகப் போற்றப்படுபவள். சைவமரபில் அழித்தற்றொழிலை இயற்றும் சிவனுக்கு அவள் சக்தி இந்தக் கொள்கை காரணமாக இத்தெய்வம் உருவாக்கப்பட்டுச் சித்திரிக்கப்படும் பொழுது பயத்தை ஊட்டுபவளாக, நிஷ்டூரமான 'ஆளுமை' யுடையவளாக எடுத்துக் கூறப்படுவதுண்டு. சக்தியின் அருட்பொலிவையும், தாய்மை நிறைவையும் ஆராதிப்பதற்கு இந்தத் துர்க்கை வடிவம் உபாசிக்கப்படுவதில்லை. அதற்கு அம்மையை உமையாக வழிபடுவர். அந்த மூர்த்தத்திலே தான் அவளது அருட் பொலிவும் அழகின் சௌந்தர்யங்களும் முனைப்புறும்.

சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட பாரம்பரியத்தின் துர்க்கை வழிபாட்டுக்கும், நம்மிடையே நடைமுறை வழக்கிலிருக்கும் காளி வணக்கத்துக்கும் தொடர்ச்சிகள் உண்டு

இந்தக் கன்னங்கறுப்பிதான் தெல்லிப்பழையில் கனிந்த மனத்துக் காமாட்சியாக, குலத்தால் சுட்டுப்போசுக்குபவளாக அல்லாது, சுகபோகங்களை வழங்கும் சுந்தரவல்லித்தாயாக வீற்றிருந்து தாலியைத் தருபவளாக, தந்த தாலியைப் பேணுபவளாக, அந்தத் தாலியின் மஞ்சட்பொலிவை தன, சுத சௌபாக்கியங்களால் பூரணப்படுத்துபவளாக அருளாட்சி நடத்துகிறாள்.

இந்தத் தலத்துத் துர்க்கையின் இந்த அருட்பரிமாணம் யாழ்ப்பாணத்தின் மாறிவரும் குடும்ப அமைப்புக்கும், பெண்கள் நிலைமைக்கும் அத்தியாவசியமான ஒன்றாகிற்று.



செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

பாரம்பரிய சமூகக் கட்டமைப்புக்களைப் புறங்காண உதவும் நவ பொருளாதார வார்ப்புக்கள் ஏற்படுத்தும் சமூக மேனிலைப் பாட்டுச் சாத்தியப்பாடுகளின் உந்துதல்களாலும் பெருகும் பெண்கல்வி, உத்தியோகவாய்ப்பு ஆதியனவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் வாழ்க்கைத் தர மாற்றங்களாலும் யாழ்ப்பாணத்துக் குடும்பங்கள் ஒவ்வொன்றையும், பெண்பிள்ளைகளின் விவாகப் பிரச்சினை தாக்கத் தொடங்கிற்று.

தெல்லிப்பழையின் துர்க்கா வழிபாட்டுப் பரிமாண மாற்றமும் இந்தச் சமூகத் தேவையும் ஒன்றிணைந்தன. 'ஒன்றிணைந்தன' என்று கூறுவதிலும் பார்க்க, தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் சமூக - மத தரிசனத்தில் ஒன்றிணைக்கப்பட்டன என்றே கூறல்வேண்டும். சமூகத் தாக்கங்களின் காரணமாக வெளியே எடுத்து மொழியப்படாதிருந்தஆனால் அடிமட்டத்தின் ஆழ அகலங்களை உதைத்துக் குதறிக்கொண்டிருந்த ஒரு சமூகக் கேள்வியை (Social demand) இந்த அருள் ''வழங்கல்'' (Supply) பூர்த்தி செய்தது.

அந்தக் ''கேள்வியும்'' இந்த ''வழங்க''லும் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் ஆளுமைத் திறனால், கல்விச் செம்மையால், முகாமை ஆற்றலால் ஒன்றிணைக்கப் பெற்றன.

''கோயில் மணியம்'' என்றால் அது ஆண்பால் ஒருமையே என்று சமூக இலக்கணம் வகுக்கப்பட்டுள்ள ஒருசமூகத்தில் ஒரு பெண்மணிய வேலையை மனிதாபிமான ஊழியமாகமாற்றிக் கொண்டுள்ளமை பெருத்த ஆச்சரியத்தை விளைவித்தது.

கோயிலின் பண்பும் பணியும் ஆழப்பட்டு அகலப்படுத்தப்பட்டன. இதுதான் அந்த இரண்டாவது சமூக - மதமாற்றமாகும்.

கோயில் மணியவேலை என்பது நமது யாழ்ப்பாணத்துச் சமூகத்தில் ஓர் அந்தஸ்துச் சின்னம். இதற்

( தொடர்ச்சி 18ம் பக்கம் )

# சரணாகதிக்கு ஒரு சிஷ்யர்

# ஸ்ரீமத் சுவாமி ஜெகதீஸ்வரானந்தா

அமைதிக்கும், பணிவிற்கும் பெயர் போன ஒரு இளந்துறவியாக விளங்குகின்ற ஸ்ரீமத் ஜெகதீஸ்வரானந்தா, சுவாமி கங்காதரானந்தாவின் ஒரே ஒரு சீடராவார்.

பூர்வாசிரமத்தில், பண்டாரவளை நகரின் புகழ் பெற்ற ஒரு குடும்பத்திலே பிறந்த இவ்விளந்துறவி, வாழ்க்கையின் எத்தனையோ லௌகீக வாய்ப்புகளையும், வசதிகளையும் உதறி எறிந்துவிட்டு துறவுபூண்டபோது 'இப்படியும் நடக்குமா' 'இப்படியும் நடக்கலாமா' என்று மனமார வேதனையுற்ற உற்றமும், சுற்றமும் இன்று தாள் பணிகின்றன. நெஞ்சுக்கு நிறைவு தேடி தஞ்சம் புகுகின்றன.

இளம் வயதிலேயே, பெற்றோரின் மனப்பூர்வமான சம்மதத்தோடும், ஆசீர்வாதங்களோடும், துறவு பூண்டு ஆன்மீக வாழ்வில் ஈடுபட்ட போது, அது அத்தனை இலகுவானதாக இருக்கவில்லை." பாரத பூமியின் இமாலய அடிவாரம் வரை தனது குருவினைத் தேடி அலைந்தார். ஆனால், அலைந்துதிரிகின்ற கன்றினை அணைத்துக் கொள்கின்ற தாய்ப்பசுபோல

நாதன்

ஆன்மீகப் பாலூட்டக் காத்திருந்தார் குருமணி ஸ்ரீமத் கங்காதரானந்தா அவர்கள். சுவாமிஜி அவர்களின் அருள் வழிநடத்தலிலே ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தவவாழ்வை மேற்கொண்டார். திருகோணமலை, சிவயோக சமாஜத்தில் இருந்தபோது கடினமான பயிற்சிகள் குருவினால் அளிக்கப்பட்டன. அனைத்தையும் குருவின் மலர்ப்பாதங்களே தஞ்சமென்றெண்ணி ஏற்று தனது ஆன்மீகப் பயணத்தைத் தொடர்ந்தார்.

காடு, தவம் போன்ற முயற்சிகளை மேற்கொள்ளாது தன்னை ஆட் கொண்ட குருவின் கட்டளைப்படி, பெற்ற அன்னையுடன் ஒரு சிறு அறையிலே வாழத்தொடங்கினார். குருவின் இசைவும் விருப்பும் இன்றி எதிலுமே பற்றோ ஈடுபாடோ கொள்ளாது, தன்னை முழுமையாக அர்ப்பணம் செய்து பரிபூரண சரணாகதிக்கு உட்படுத்திக் கொண்டார்.

குருவின் கட்டளையை சிரமேற் கொண்டு அவ்வப்போது செங்கலடி, கொழும்பு, மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் சில காலம் லண்டனிலும் தங்கியிருந்தார். ஆயினும் அவர்தம் பெருமளவு காலம் பண்டாரவளையிலேயே கழிந்தது.



பக்தர்கள் 'பெரிய சுவாமிஜி, சின்ன சுவாமிஜி' என்று ஆசையோடு அழைக்குமளவு, தன்னை இறைநெறியில் இட்டுக் கொண்டார். பெரிய சுவாமிஜி அவர்களே, பல பக்தர்களை 'சின்ன சுவாமிஜியை தரிசியுங்கள்' என்று கட்டளை இட்டதுண்டு.

சிவந்த மேனியில் காவி ஆடை, மெல்லிய தேகம், வளர்த்த சடை, கருணையும், சாந்தமும் பொங்கித் ததும்பும் அழகு முகம், மென்மையான-ஆனால் ஆழமான வார்த்தைகள். இந்த உருவத்துக்குள் அடங்கிக் கிடக்கும் ஆன்மீக சைதன்யத்தை நாம் அறியவா முடியும்?

பேச்செல்லாம் - துன்பத்திற்கு ஆறுதலும் மகிழ்வும் தருவதாக இருக்கும். வார்த்தைகள் மிகவும் அமைதியாக ஒலிக்கும். எத்தனைபேர் வந்தாலும் இனிமை மாறாத கருணை. பேசுகின்ற பேச்சின் தொனிப் பொருள் எப்போதும் 'பெரிய சுவாமிஜி' பற்றியதாகவே இருக்கும்.

( தொடர்ச்சி 17ம் பக்கம் )

# யாம் பெற்ற இன்பம்

— திருமதி சற்குணநாதன் —

கங்காதரானந்தா என்ற சுவாமிஜியின் ஞான ஒளியினால் ஆன்மீக வாழ்வுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டோர் ஆயிரக் கணக்கானோர். அவர்கள் பெற்ற அநுபவங்கள் அற்புதமானவை - அந்த ஆயிரமாயிரம் பேரோடு எமது குடும்பமும் சுவாமிஜியின் அருள் நிழலுக்குட்பட்டது. யாம் பெற்ற இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்தமையைப் பெரும் பேறு ஆகக் கருதுகின்றேன்.

இலங்கையில், அதுவும் திருகோணமலையில் வாழ்ந்த சுவாமிஜி அவர்களைப் பற்றி அறிய 1987ம் ஆண்டே எமக்கு நேரம் கைகூடியது. 1987ம் ஆண்டு முற்பகுதியில், சுவாமிஜி அவர்கள் நோயுற்று தனியார் மருத்துவ மனை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த போது, பக்கத்து அறையிலே, எனது கணவரும் சிகிச்சைக்காக அநுமதிக்கப்பட்டிருந்தார்.

சுவாமிஜியைப்பற்றி அறிந்து, குடும்பமாக அவர் முன்நின்றபோது, 'வாருங்கள்' என்று அன்புடன் அழைத்தார். மென்மையாகப் பேசினார்; ஆசீர்வதித்தார். அன்று ஏற்பட்ட ஈர்ப்பு அவர் காலடியே தஞ்சம் என்று எம்மை இழுத்துச் சென்றது. நான்கு ஆண்டுகளே தொடர்பு கொண்டிருந்தோம் என்றாலும் நாற்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிறைவையும் இன்பத்தையும் நாம் அநுபவிக்கின்றோம்.

சுவாமிஜி அவர்களை நினைக்கும் போதெல்லாம் அவர் ஞானகுருவாக அருளிய வார்த்தைகள் எமக்கு ஞாபகம் வருகின்றன. அருள் நிறைந்த அவரது கண்களை எண்ணி மெய்மறந்து போகிறோம். மீண்டும் மீண்டும் அவரைக் காணவேண்டும் என்ற தாகம் எழுகின்றது. அவர் முன்னால், தாள் பணிந்து நிற்கும் போது எமது குறைகள் தீர்ந்து விடுகின்றன. மனம் தெய்வீக அமைதி பெறுகின்றது.

மனிதமனம் நிலையானதில்லையே! அமைதிக்கு மறுகணமே பிரச்சனைகள், வேதனைகள்! அவற்றை ஏற்கவும், தீர்க்கவும், வழிகாட்டவும் அந்த சாந்த சொரூபியின் பாதகமலங்களே எமக்குத் தஞ்சமாக இருந்திருக்கின்றன. கணவன், மனைவி என்ற இரண்டு சக்கரங்களும் ஒத்து உருண்டால்தான் குடும்பம் என்ற வண்டி இயங்கும். சுவாமிஜியின் பேரருளால் ஆன்மீக வாழ்வு தேடி எமது வண்டி அமைதியோடு அசைகிறது.

மனம் நொந்து வருந்தும் போதெல்லாம், சுவாமிஜிக்கு கடிதங்கள் எழுதுவோம். கோயில்களுக்குச் செல்லுவோம். குழம்பிப்போய் மனம் செய்வதறியாது தத்தளிக்கும். அப்போது எனக்கு, பாரதத்தின் திரௌபதி ஞாபகம் வருவாள். அவளுக்கு அவலநிலை ஏற்பட்டபோது தன் கையே தனக்குதவி என நம்பினாள். ஆனால், அவை உதவவில்லை. கைகள் இரண்டையும் தலை மேற் குவித்து, கண்ணனை அழைத்தாள். ஆபத்பாந்தவனாக வந்து காத்து அருளினான் கண்ணன்! அந்த சரணாகதி எமக்கும் அவசியமானது. 'சரண்' என அடைந்தோரை சுவாமிஜி அவர்கள் ஒரு போதும் கைவிட்டதில்லை.

சுவாமிஜி அவர்கள் கொழும்பு வரும் போதெல்லாம், குடும்பத்தோடு சென்று தரிசிப்போம். ஆறுதலாகவும் ஆதரவாகவும் பேசுவார். சிலவேளைகளில் ''நான் எல்லாவற்றையும் முன்வைத்துள்ளேன், வேண்டிய அளவு பாத்திரம் கொண்டு வந்து அள்ளுங்கள்'' என்பார்.

அதன் அர்த்தம் இப்போதுதான் புரிகிறது.

பலதடவைகள் சுவாமிஜி அவர்களின் கால்கள் வீங்கி காணப்படும். இது பக்தர்களின் நோய்களையும், துன்பங்களையும் அவர் ஏற்றுக் கொள்வதால் உருவாகும் நிலை. அதுபற்றிக் கேட்டால், 'பயப்பட வேண்டாம்' என்று அன்புடன் கூறுவார். அன்புடைய ஞானியின் என்பும் பிறர்க்கு உரியதுதானோ?

எமது பல குறைகள் சுவாமிஜியின் திருவருளால் சுலபமாகத் தீர்ந்துள்ளன. எமது புதல்வர்களை மேல் நாட்டுப் படிப்புக்கு அனுப்புமாறு கூறி எமக்கு அருள் தந்தார். நெஞ்சுக்கு அமைதி தந்தார்!

சுவாமிஜியின் பஜனையை எமது வீட்டில் நடாத்த நாம் ஆசைப்பட்டோம். எமது எண்ணத்தைத் தெரிந்து கொண்டதோடு, எமது வீட்டிலே சிறப்பாக பஜனையைச் செய்யுமாறும் அதனை வீடியோ செய்யுமாறும் கூறினார். ''வீடியோவை பிறநாடுகளுக்கு அனுப்ப உள்ளேன். பார்ப்பவர்கள் ஏளனம் செய்யும் வகையில் இருக்கக் கூடாது'' என அவர் கூறிய போது நாம் நெகிழ்ந்து போனோம். அந்த பஜனை 1-10-88ல் இடம் பெற்றது. கூறுவதும் இயக்குவதும் அவரது திருவருளே என்பது எமக்கு நன்கு புரிகின்றன.

விசேட பஜனை ஒன்றுக்கு, இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்கள் வருகை தர இருந்தார். அவரை வரவேற்றுச் சொற்பொழிவாற்ற தனக்குத் தகுதியில்லை என எனது கணவர் தயங்கியபோது, 'அவசியம் செய்ய வேண்டும்' என சுவாமிஜி அவர்கள் கட்டளை இட்டதோடு, அனைத்தும் சிறப்புற நிகழவும் அருள் புரிந்தார்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

இங்கிலாந்தில் இந்து கலாசாரம்

பயணக் கட்டுரை - 3 — ஏ. எம். துரைசாமி

# தியாகச் செம்மல் ஆனந்ததியாகர்

இங்கிலாந்தில் இந்து கலாசாரம் என்ற தலைப்பில் நான் எழுதிவரும் தொடர் கட்டுரையின் மூன்றாவது கட்டுரை இது.

சென்ற இதழில் வெளிவந்த இரண்டாவது கட்டுரையின் முடிவில் சைவமுன்னேற்றச் சங்க இலண்டன் கிளையின் பொதுச் செயலாளர் திரு. ஆனந்த தியாகர் அவர்கள் ஆற்றிவரும் சேவைகளைப்பற்றி எழுதுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம். இந்த இதழில் திரு. தியாகர் அவர்கள் ஆற்றிவரும் சேவைகளை சுருக்கமாக எழுத விரும்புகின்றேன்.

சைவமுன்னேற்றசங்க இலண்டன் கிளையின் பொதுச்செயலாளரான திரு. ஆனந்ததியாகர் 'தியாகத் தீயில் புடம்போட்ட ஒரு தியாகச் செம்மல்' என்றால் மிகையாகாது. அவர் இலண்டன் ஈஸ்ட்ஹேமில் அரசாங்க மருத்துவமனை ஒன்றில் அதிகாரியாக கடமையாற்றுபவராக இருந்தபோதிலும், இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் பொதுச் செயலாளராக முழுநேர ஊழியராக கடமையாற்றுபவராக நினைக்கத் தோன்றுகிறது.

திரு. தியாகர் சுத்தமான ஒரு சைவர். தமது இல்லத்தையே ஒரு கோவிலாக வைத்திருக்கிறார். கடும் குளிரையும் பொருட்படுத்தாது காலை 4.00 மணிக்கெல்லாம் எழும்பி பட்டை பட்டையாக திருநீறணிந்து பூசை செய்ய ஆரம்பித்து விடுவார். பூசையின் மணியோசை வீடெங்கும் ஒலிக்கும். அவரது தர்மபத்தினியாரும் அன்புச் செல்வங்களும் முருகா, முருகா என்ற முருகநாம பஜனை பாடுவதை கேட்கும்போது உடம்பு புல்லரித்துவிடும். மருத்துவமனை ஒன்றில் ஒரு அதிகாரியாக கடமையாற்றும் இவர் அங்கு தமது கடமைகளை செய்வாரோ என்பது சந்தேகத்துக்கிடமானது. சைவ முன்னேற்றச்சங்க இலண்டன் கிளையின் தலைமையகமே அவரது இல்லம் தான். செயற்குழுக் கூட்டங்களோ ஆலோசனைக் கூட்டங்களோ அங்குதான் நடைபெறும். எங்கு சைவ முன்னேற்றச்சங்க இலண்டன் கிளையின் நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் அங்கு அவர் பிரசன்னமாய் இருப்பார். மாணவ, மாணவியருக்கு நடத்தப் பெறும் நால்வர் தமிழ் கலை நிலையத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்துகிறார். பொதுக் கூட்டங்களில் அழகாக அழகு தமிழில் சமய சொற்பொழிவு நிகழ்த்துவார். அவரது சிந்தனை, செயல் கடமை எல்லாம் இலண்டன் சைவ முன்னேற்றச்சங்கத்துக்கே உரியது.

இத்தகைய ஒரு சிறந்த சமய ஊழியரை இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் பெற்றிருப்பது பெரிய அதிர்ஷ்டமாகும்.



திரு. ஆனந்ததியாகர், அவரது அன்பு மனைவி, குழந்தைச் செல்வங்களோடு.

திரு. ஆனந்ததியாகர் ஒரு பெரிய சைவக் குடும்பத்தில் பிறந்தவர். இவரது தந்தையார் ஒரு பெரிய முருக பக்தர். தாயார் திலகவதி அம்மையாரைப் போன்றவர்.

கொம்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சமயப் பணிசெய்ய 1953ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சைவ அன்பர்களின் கூட்டமொன்று திரு. த. சிவலிங்கம் அவர்கள் தலைமையில் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தை கூட்டுவித்தவர்களில் ஒருவர் திரு. ஆனந்த தியாகர் அவர்களின் அருமைத் தந்தையார் காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு. என், பி. சதாசிவம் அவர்களாகும்.

இக்கூட்டத்தில் தான் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம் நிறுவப்பட்டது. சங்கத்தின் போஷகராக திரு. த. சிவலிங்கம் அவர்களும் தலைவராக திரு. வ. சிவஞானம் அவர்களும் பொதுச் செயலாளராக திரு. செல்லத்துரை அவர்களும் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

( தொடர்ச்சி 14ம் பக்கம் )

# மனம் கெட்டால் மாநிலம் கெடும்

ஸ்ரீமத் கங்காதரானந்தா மஹராஜ்

பிரமாண்டமான இப்பிரபஞ்ச நியமங்களைப் பற்றிய ஒரு சாமானிய அறிவு உணர்வுக்காவது இம் மண்ணுலக மனிதன் ஒரு கணமேனும் தலைவணங்கி நிற்பானேயானால் இவ் வையகம் பெருஞ் சுகமடைய வழியுண்டு.

மனிதன் இப்பூவுலகில் வாழ்ந்தும் அதன் உண்மைகளை உள்ளபடி அறியாமல் ஒன்றை இன்னொன்றாகவே கருதி வாழ்வதால் ஏமாற்றங்கள் பல சம்பவிக்கின்றன.

உண்மையைக் கிரகிக்க முடியாத மனம், மாறி மாறி வரும் ஏமாற்றங்களால் தன்னம்பிக்கை இழந்து வாழுந் திறமையுமற்று இறுதியில் மன வெறுப்பால் தரந் தாழ்ந்த குணமுடையதாகவும் மாறி விடுகின்றது.

## மனித சுபாவம்

மனிதருடைய அந்தரங்க உணர்வு தனது சக ஜீவிகளிடம் அன்பும் சமரச பாவனையும் உடையதாயிருந்த போதிலும், சொந்த விருப்பு வெறுப்புகளுக்குப் பங்கம் விளையும் பொழுது மனித சுபாவம் கொடிய விலங்குகளை விட மூர்க்க குணமுடையதாகின்றது.

நேற்று வரையிலும் இனிமையாகவும் நன்மையாகவும் போற்றிப் புகழ்ந்து வந்தவைகள் எல்லாம் கசப்பும் பகைமையும் உடையவைகளாகவே மாறிவிடுகின்றன. பகைமை கொண்ட மனமும் பாகனில்லாத யானையும் ஒன்றே. இங்ஙனம் சுயநலத்தால் வெறுப்பும் பகைமையும் கொண்டு சீறும் மனம் நல்ல குணங்களெல்லாமிழந்து மதயானை போன்று தனக்கும் சமுதாயத்திற்கும் பெருங் கேடுகளை விளைவிக்கின்றது.

இப்படியான கரவுக் குணத்திலிருந் தெழுந்த விளைவுகள் தனி மனிதனிலிருந்து உலக ரீதியில் தோன்றிக் கொண்டிருக்கும் சகல தொல்லைகளுக்கும் மூல காரணம்.

## மிக அரிது

காலம் போகப் போகச் சிறிதேனும் உள்ளக் களிப்புடன் அமைதி நிறைந்த ஆத்மார்த்தமான ஒருவரைக் காண்பதே அரிதாகிவிட்டது.

மனிதன் தன் தன் உணர்வுகளை, செயல்பாடுகளை உன்னிக் கவனிப்பதில்லை. மனம் தோற்றுவிக்கும் விருப்பு வெறுப்புகளின் பலாபலன்களை அலசி ஆராய்வதுமில்லை.

கெடுபிடிக்குரிய யதார்த்த காரணங்கள் வேறெங்கேயோ இருக்கையில், விருப்பு வெறுப்புகளை மாத்திரம் முன்வைத்துப் பிரச்சினைகளைத் தீர்க்கப்பார்த்தால் மேலும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

மனிதன் மனச் சாட்சியை நேர் கோட்டில் வைத்துக் காரிய காரணங்களைப் பார்த்தறியப் பழக வேண்டும்.

## மனித மனம்

பால் அதிக சத்து நிறைந்த உணவாயினும் கெட்டால் நச்சுத்தன்மையடைகிறது.

மனத்தால் வாழுகின்றவன் மனிதன். மனிதருடைய மனம் கெட்டுவிட்டால் இவ்வையகம் முழுவதும் கெடும்.

அடிமனம் விஷக் கலப்பில்லாத அமிர்த துல்லியமானது. பேராசையும் அகங்காரமும் மனமென்ற பொதிக்குள் விஷத்தை ஊற்றிவிடுகின்றது.

அக்கினியின் ஒளியால் கவரப்பட்டு அதிலேயே மாண்டு மடிகின்ற விட்டில் பூச்சி போன்று உலக வாசனையால் தடிப்பேறிய அகங்காரமும் பேராசையும் அதற்குரியவரைச் சுட்டெரிக்கின்றன.

## உலகின் நிலை

கேடுகள் பூமியில் இருந்தும் வானத்திலிருந்தும் உருக்கொள்வதில்லை. அவைகள் மனித மனத்திலிருந்து சிருஷ்டிக்கப்படுகின்றன.

பேராசையும் சுயநலமும் கேடுகளை வளர்த்தெடுக்கின்றன.

இவ்விரு நீச குணங்களுடைய பராமரிப்பில் வளர்ந்து வருகின்ற உலகம் சர்வ நாசத்திற்கு ஊர்ந்து செல்லக்கூடும்.

மிலேச்ச குணங்கள் கண்களைத் திசைமாறிப் பார்ப்பதற்குப் பழக்கி வைத்திருக்கின்றபடியால் அது நேரான மார்க்கத்தைப் பார்ப்பதற்குரிய ஒளியை இழந்து வருகின்றது.

ஜனங்களுடைய நல்ல சுபாவந்தான் உலக சேமத்தின் ஆதார பீஜம். இதை ஒவ்வொருவரும் திடமாகவே கருத்தில் ஊன்ற வேண்டும்.

மனிதர் களங்கமற்ற நற்குண சீலராய் வாழ்ந்தால் கலகமும் கலக்கமும் இருக்கமாட்டா. எதார்த்தம் இவ்வாறிருக்கையில் வெவ்வேறு மார்க்கங்களில் யோக சேமங்களைத் தேடப் பார்ப்பது அர்த்தமற்றதாய் விடுகின்றது.

ஆத்மீக சிட்ஷணங்கள் சமய ஆசார அனுஷ்டானங்கள் எல்லாம் மனக் கசடுகளை உருக்கி மனிதர்களை நல்ல சுபாவ சுத்தியுடையவர்களாக்குவதற்கு உரிய உபாயங்களாகும்.

( தொடர்ச்சி 13ம் பக்கம் )

# யோகர் சுவாமிகளும் ஸ்ரீமத் கங்காதரானந்தாவும்

— வி. என். சிவராஜா —

கங்கையும், யமுனையும் ஓரிடத்திலே சங்கமித்தது போன்று யோகர் சுவாமிகளும், ஸ்ரீமத் கங்காதரானந்தா அவர்களும் ஒரே ஒரு தடவை, யாழ்ப்பாணத்தில், சுன்னாகம், இராமநாதன் கல்லூரிக்கு அருகில் மருதனாமடத்துச் சந்தியில் சந்தித்துள்ளார். இச்சந்திப்பு மட்டுமே அவர்கள் இருவரும் உடலளவில் சந்தித்த ஒரே சந்திப்பாகும்.

ஆரம்ப காலத்தில், ஸ்ரீமத் கங்காதரானந்தா இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள ஆலயங்களையும், புனித தலங்களையும் தரிசித்து வந்துள்ளார். இது 1946ம் ஆண்டு அவர் திருகோணமலையில் நிரந்தரமாக வதிவதற்கு முன்பாகும். ஒரு தடவை யாழ்ப்பாணம் வந்தபோது, உடுவில் எனும் இடத்தில் தமது நண்பர்களுடன் தங்கி இருந்தார். மாலை நேரங்களில் மருதனாமடத்துச் சந்திக்கு வந்து சிறிது நேரம் நின்றுகொண்டிருப்பாராம்.

ஒருநாள் மருதனாமடத்துச் சந்தியில் 'சும்மா இரு' என்ற மனநிலையில் நின்றுகொண்டிருக்கையில் திடீரெனத் தனது கையை யாரோ பற்றுவதையும் அதனால் உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டதையும் உணர்ந்தார். திரும்பிப் பார்த்தபோது யோகர் சுவாமிகள் மிகுந்த ஆவலுடன் சுவாமிஜியை உற்று அவதானித்துக்கொண்டிருந்தார்.

இரு ஞானத்துறவியரதும் கண்கள் சந்தித்துக் கொண்டன. அங்கே அறிமுகத்துக்கு அவசியமிருக்கவில்லை. தாம் முன்பே கேட்டு அறிந்திருந்த யோகர் சுவாமிகள் அவரே என்பதில் சுவாமிஜிக்கு சந்தேகம் இருக்கவில்லை.

சுவாமிஜி அவர்களை யோகர் சுவாமிகள் பாலன் என்றே அழைத்தார். 'பாலன் நாம் கோப்பி குடிப்போம்' என்று கூறி அருகிலிருந்த தேநீர் கடைக்கு அழைத்துச் சென்றார். பின் யோகர் சுவாமிகள், 'துரைராயனின் கடை, கோப்பி, தோசை, சுண்டல் கடலை என்பவற்றுக்கு பெயர் போனது' என்று சுவாமிஜியிடம் கூறி, தோசையும் சுண்டலும் எடுப்பித்தார். இருவரும் உண்டனர்.

ஒரு தாய்க்கே உரிய பரிவுடன் சுவாமிஜியை உண்ணச்செய்தார் யோகர் சுவாமிகள். வெளியே வந்ததும் சுவாமிஜியை ஆசிர்வதித்துவிட்டு, வழமை போலத் தமது கால்போன போக்கிலே போனார். இரண்டு துறவியரையும் நன்கறிந்திருந்த எஸ். சிவதாசன் என்ற பக்தர் ஒருதடவை, சுவாமிஜியிடம் 'யோகர் சுவாமிகளை கண்டிருக்கிறீர்களா?' என்று வினவியபோது, சுவாமிஜி அவர்கள் 'நாம் உடலளவில் காணவேண்டிய அவசியமில்லை' என பதில் தந்தார். அவர் கூறியதற்கு உதாரணமாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஒருநாள், அப்போது திருகோணமலை, இலங்கை வங்கிக்கிளை முகாமையாளராக இருந்த கந்தப்பு என்பவரை சுவாமிஜி அழைத்து வாடகைக் கார் ஒன்று கொணருமாறு பணித்தார். எத்தனையோ பக்தர்களின் கார்களில் செல்லும் வாய்ப்பு சுவாமிஜி அவர்களுக்கு இருந்தும் இங்ஙனம் பணித்தமை திரு. கந்தப்புவுக்கு வியப்பளித்தது. எனினும் வாடகைக்கார் வந்ததும் சுவாமிஜி அவர்களும், பக்தரும் ஏறிக்கொள்ள உப்புவெளிக்கு செல்லுமாறு சுவாமிஜி கூறினார். உப்புவெளியிலுள்ள சியாமளா மருத்துவ மனையில் தமது ஓய்வுக்குபின் பணியாற்றிய டாக்டர் இராமநாதன் யோகர் சுவாமிகளின் சிறந்த பக்தராவார்.

திரு. இராமநாதன் தங்கியிருந்த இல்லத்தருகே சென்றதும் காரை நிறுத்தச் சொன்ன சுவாமிஜி வீட்டுக்குள்ளே வேகமாகச் சென்று மேசைமேலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு காருக்கு வந்ததும், கார் சிவயோக சமாஜத்தை அடைந்தது. இச்சம்பவம் நடந்தபோது திரு. இராமநாதன் வீட்டில் இருக்கவில்லை. சுவாமிஜி எடுத்துவந்த புத்தகம் யோகர் சுவாமிஜிகளின் அருளுரைகள் அடங்கிய நற்சிந்தனை ஆகும்.

சிலதினங்களின் பின்புதான் திரு. கந்தப்பு அவர்களுக்கு தெரிந்தது, அந்த நூல் யோகர் சுவாமிகளால் யாழ்ப்பாணத்தில் வைத்து திரு. இராமநாதனிடம் சுவாமிஜி அவர்களிடம் கொடுக்குமாறு கொடுக்கப்பட்டதென்பது.

அந்நூல், திருமதி இரட்னமா நவரட்னம் என்பவரால் எழுதப்பட்டு, யோகர் சுவாமிகளின் பாதகமலங்களில் வைத்து ஆசீர்வாதம் பெறப்பட்ட முதல் மூன்று பிரதிகளுள் ஒன்றாகும்.

டாக்டர் இராமநாதன் தனது பெருமளவு நேரங்களை திருகோணமலையில் சுவாமிஜியுடனே கழித்தார். யோகர் சுவாமிகள் தமது ஏனைய பக்தர்களையும் திருகோணமலையில் சுவாமிஜியிடம் செல்லுமாறு வழிப்படுத்தினார் என அறிகிறோம்.

இவ்விரு மகாஞானிகளையும் தரிசித்த, தாள் பணிந்த பக்தர்கள் என்ற முறையில் அவர்கள் மனித குலத்திற்கு ஆற்றிய தன்னலமற்ற ஞானப்பணிகளுக்கு நாம் சிரம் தாழ்த்த வேண்டியவர்களாவோம். உலக ஷேமத்திற்காக இவ்விரு ஞானியரும் சந்தித்துக் கொண்டமையை எமது பிரார்த்தனை, தியானங்களில் மீட்டுப் பார்ப்போம். இருவரும் தந்த ஞானாமிர்த வசனங்களைப் பின்பற்றி எமது வாழ்வினையும் செம்மைப் படுத்திக் கொள்வோமாக.

# மறவாதிருப்போமாக!

— சுவாமி ஜெகதீஸ்வரானந்தா —



குருர் பிரம்மா, குருர் விஷ்ணு
குரு தேவோ மகேச்வர
குரு சாட்ஷாத் பரப்பிரம்மம்
தஸ்மைஸ்ரீ குருவே நமஹ

கடவுளுடைய திருஅவதாரமாகிய எமது குருதேவர் அவர்கள் சிறுபராயத்திலேயே பதினெட்டு வருட காலம் கடுமையான தவத்தை மேற்கொண்டு, அத்தவ வாழ்க்கையில் தாங்கொணாத உபாதைகளைத் தாங்கி அருள் ஞானம் அடைந்த பிரம்மஞானி ஆவார். மகா ஞானியாக இந்தப் பூவுலகத்தில் வாழ்ந்த அவர் ஒரு துறவியின் தவவாழ்க்கை எவ்வாறு அமையும் என்பதையும் அதன் பின்னர் லௌகீக வாழ்க்கையின் மத்தியில் ஒரு துறவி எவ்வாறு பற்றற்று வாழல் வேண்டும் என்பதையும் பிரத்தியட்சமாக வாழ்ந்து காட்டியவர். பிரம்மஞானியான அவர் தன்னுடைய வாழ்க்கையை எவ்வித பிரதியுபகாரமும் கருதாத, எல்லையற்ற தியாகத்தின் இருப்பிடமாகவே அமைத்துக் கொண்டவர். பிறருக்காகவென்றே வாழ்ந்த

எமது குருதேவர், ஆத்ம தாகம் கொண்டவர்கள் கிரஹஸ்ததர்மத்தில் இருந்து செய்ய வேண்டிய கருமங்களைச் செய்து கொண்டே ஆன்மீக வழியில் முன்னேறுவதற்கு அருள்பாலித்தவர். அத்தோடு தனது பக்தர்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்ட லௌகீகப் பிரச்சினைகளையும் துயரங்களையும் தனது அருள் சக்தியினால் நீக்கி அவர்களுக்கு மனநிம்மதியை அருளினார். அடியார்கள் துன்பத்தால் அல்லலுறும்போது அவர்களின் கனவுகளிலும் மற்றும் அவர்கள் முன் பிரத்தியட்சமாகவும் அருட்காட்சி தந்து அத்துன்பங்களை நீக்கியருளினார். தனது பக்தர்கள் அல்லலுறும் போது தனது அருட் சக்தியால் மனிதர்களையே உருவாக்கி அனுப்பி உதவி செய்து அருள்புரிந்தார்.

பல்லாயிரக் கணக்கான பக்தர்களின் உடல் நோய்களை யெல்லாம் தனது தவத்திருமேனியிலும், மன நோய்களையும் துன்பங்களையும், மனதிலும் தாங்கி அவர்களுக்கெல்லாம் சுகத்தையும் அமைதியையும் பெற்றுக் கொடுத்து தனது உடலையே அவர்களுக்காக அர்ப்பணித்த தெய்வத்தயாளன் எமது குருதேவர். மனித குலத்திற்காக எல்லையில்லாத தியாகங்களைச் செய்து தியாகங்களின் பிரதிபிம்பமாகிய, எமது கடவுளாகிய குருதேவர் அவர்களின் மகா சமாதியைப் (மறைவை) பற்றி எண்ணிக் காலமெல்லாம் கண்ணீர் வடிக்கின்றோம் நாங்கள்.

எமது ஞானகுருவை நேரில் கண்டு, தரிசித்து ஆறுதல் வார்த்தைகளும், ஆசீர்வாதங்களும் பெறும் அரிய வாய்ப்பினை நாம் இழந்து விட்டாலும், எமது குருதேவர், நித்தியனாய், நிர்மலனாய், சர்வ வியாபியாய் தனது நுண்ணிய தெய்வ சரீரத்தோடு (சூக்கும சரீரத்தோடு) காலங்காலமாய் எமக்கு அருள்புரிவார் என்பது சத்தியமான உண்மையாகும். இதனை சுவாமிஜி அவர்களின் பக்தர்களும், ஏன் அனைவருமே தமது அநுபவ வாயிலாக உய்த்து அறியலாம். நெஞ்சு நெக்குருகி நினைப்பவர்க்கெல்லாம் எமது குருதேவர் தோன்றாத் துணைவனாய்க் காத்து அருளுவார் என்ற பெரும் பேருண்மையை நாம் மறவாதிருப்போமாக.

---

●● பொருளின் தாரதம்மியங்களைக் கொண்டு வாழ்க்கையின் உயர்வு தாழ்வை நிச்சயிப்பது மடமை. மனதின் தராதரத்தைக் கொண்டுதான் அதை நிச்சயிக்க வேண்டும். மனத்தெளிவுடையவனுக்கு இலாபமும் நட்டமும் ஒன்றேயாகும்.

சுவாமி கங்காதரானந்தாஜி

---

# IN MEMORY OF A FATHER

— VASANTHI —



We should be so blessed to call this great sage a father ! Yet he had the love of humanity so close to his heart, that a father he became, so effortlessly. I have exalted my life by being in the presence of this great Guru, only for a space of about two years. As I was told by a respected devotee of the Swami, it is not the time you spend and but the volume of knowledge and faith one aquires Like a vessel dipping into a river We are all vessels having dipped into his vast store house of knowledge, love and compassion. We are all wiser and richer than before, but all at different stages.

As I write, swami's calm smiling face comes before me. This was the reason the swami appealed to me. I met him through curiosity, he did not say a word, but smiled so sweetly that he touched my heart and let it over flow. Eversince then all my earthly burdens, thoughts and fears have been shared by this father. He has counselled me through one of the most terrible crisis in my life. All this with only a smile and a gentle word. I have lost a father, Nay, a friend, the best friend I ever had! Yet, as the other devotees feel, we haven't actually lost him. Now he is more omnipotent than before!

In talking of his greatness let us not forget the penance and endurence he underwent in order to gain this stage of enlightenment. Having spent his formative years in constant meditation and devotion to his faith, in search of Truth, he is able to reach the inner sanctum with ease. One example I wish to share is, when my husband's life hung by a thread while in surgery in far away America, the swami reassured persons here that he will come through. While I was repeating his favourite manthram the surgeons came out and told me there was no hope as the pressure had dropped. I continued praying and all I saw before me was swami's gentle face smiling sweetly at me. Then the surgeon came back to say the pressure had miraculously risen and the surgery could proceed! I acknowledged through my tears for I knew with swami's blessings he will come through. Before I left swami gave me his blessings and promised me that I will bring my husband back alive. I needed this as the medical world here and in the U. K. said otherwise.

Childishly I even argued with swami, like I did with my late father! Then he smiled, stroked his beard and gave me a jasmin from those amongst

his feet saying look fater this for me. Is this all you can give me I said shocked, he smiled and nodded. Months later when i returned triumphantly and fell at his feet he joked and said I hope you are taking care of my pushpam. I understood then and said yes Swami both the pushpam and my husband are doing well. That pushpam is a sacred relic in my shrine room today.

This is only a single example of the numerous occassions he has been the instrument of solace and comfort to those hundreds who fel at his feet. One of the greatness of swami Gangadhara Ananda was his quality of humility, which sadly is lacking in the world today. But then such a quality is only associated with true greatness. We who have had the privilege to bask in the greatness or this saint should not forget the lessons learnt at his feet. Every word a gem every thought a jewel, Let the saint Gangadhara Ananda live though us!.

*SELECTED*

# SAYINGS

OF

*HIS HOLINESS*

## Swami Gangadharanandaji

- There should be opportunity for the people of a country to enjoy the nations natural resources and the artificial products on an equal footing. If that is so then temptation to commit the great crimes will reduce and patriotism and love for the land will increase.

- Material education could only educate those matters within the ambit of the intellect. By religious education you get to know matters that transcend the intellect

- Whatever you may have learnt what is the use of all your learning when you on your own cannot find solutions for your personal problems?

- Many a chance await you. Like a baby refusing to eat while fondly fed those who do not know how to realise the opportunities and execute do not redeem themselves from sorrow.

- When human life deteriorates to such a low level that one begins to hate life itself, when social values are lost at least as a sense of gratitude for having been born as human beings we are obliged to live a noble life. Any action performed without realising this amounts to doing harm to oneself.

- You are offering water and food at regular hours to God who is free from hunger and thirst; You are providing Special lodging to him who can dwell even in a pillar or fibre. If you could extend the same sympathy and action to the helpless who crawl in human form that is the best offering to God.

- God does not penetrate, even to the size of a mustard. the heart of those who over eat to the extent of straining their intestine and do not think of those who are forced to live on leaves and twigs.

# அவனருளாலே அவன்தாள் வணங்கி

இறைவனின் படைப்பு மகிமை, அவ்வப்போது காலத்துக்குக்காலம் தோன்றுகின்ற அவதார புருஷர்களின் ஆன்மீக மேம்பாட்டு வெளிப்பாடுகளினால் மனிதகுலத்துக்கு உணர்த்தப்படுவதை மக்கள் அறிவர்.

ஆத்மீக ஞானிகளின் மகிமை நிறைந்த செயல்கள் பகிரங்கமாகவும், இரகசியமாகவும் வெளியாவதன் காரணமாக மனிதர்கள் தத்தமது கடவுள் நம்பிக்கையை தாம் நம்பியுள்ள வழிகளின் ஊடாக மென்மேலும் வளர்த்துக்கொள்கின்றனர்.

தமக்கு வாய்த்துள்ள தெய்வீக சக்திகளின் ஆற்றலை தன்னடக்கத்தோடு மெய்ப்பித்துவரும் ஞான மகான்களின் வரிசையிலே உதித்து வாழ்ந்தவர்தான் திருகோணமலை சிவயோக சமாஜத்தின் குருமணியான சுவாமிஜி கங்காதரானந்தாஜி அவர்கள்.

சுவாமிஜி அவர்கள் அண்மையில் (16-2-1991ல்) மகாசமாதி அடைந்தார். 1-1-1912ல் கேரளத்திலே அவதரித்த சுவாமிஜி அவர்கள், அவர்பெற்ற தவப் பயன் காரணமாக அல்லல்படும் அடியார்களின் அவலம் அகற்றும் அவதார புருஷரானார். தெய்வப் பணியை சிரமேற்கொண்டு தெய்வமாகவே வழிகாட்டினார். தம்மை நம்பி வந்த அடியவர்களின் நலன்களைப் பேணுவதில் தம் ஆற்றலையும் சக்தியையும்

சி. ஆறுமுகம்

சுவாமிஜி அளவின்றி அர்ப்பணித்தார். மனிதர்களின் வாழ்வு, "எப்பவோ முடிந்த காரியம்" என்பது யோகர் சுவாமிகளின் திருவாக்கு. மனிதர்களின் முக்காலத்தையும் உணர்ந்த சுவாமிஜி அவர்கள், தம்மை நாடிவருபவர்களின் எப்பவோ முடிவாக்கப்பட்ட வாழ்க்கை நிலைகளுக்கு ஏற்ப வழிகாட்டினார்.

தற்போது வதிரி, பரமானந்த ஆசிரமத்தில் அருட்பணிபுரியும் சுவாமிஜி சிவயோகானந்தா, பண்டாரவளையில் இருக்கும் சுவாமிஜி ஜெகதீஸ்வரானந்தா, ஜேர்மனியைச் சேர்ந்த சுவாமி றோல்வ் ஆகியோர், சுவாமிஜி கெங்காதரானந்தாவை குருவாக அடைந்த அதி உயர் ஆன்மீக சாதகர்கள் என்பதை அவரது மெய்யடியார்கள் அறிவர்.

மனிதர்களின் பலதரப்பட்ட வாழ்வுநிலைகளுக்கு இயைய, தம் அருட்பார்வையால் அவர்களுக்கு அநுக்கிரகம் புரிந்துள்ள சுவாமிஜி அவர்கள், தமது முக்கிய இருப்பிடமாகக் கொண்ட திருகோணமலை பிரதான வீதியில் அமைந்துள்ள சிவயோக சமாஜமும், மூன்றரை மைல் தூரத்தில் அமைந்துள்ள நடேசர் கோயிலும், பத்து மைல் தூரத்தில் பண்மத வாச்சியில் உள்ள வயல் சார்ந்த சுற்றாடலும் சுவாமிஜியின் பெருமைகூறும் நிலையங்களாகும்.

சுவாமிஜி கோணமலை ஆலயத்தில் ஞானயோகம் பெற்றார். கதிர்காமத்தில் காவி உடை தரித்தார். இலங்கையின் பல பாகங்களுக்கும், இந்தியாவிற்கும் பலதடவைகள் விஜயம் செய்துள்ளார்.

சிவந்தமேனி, தீட்சண்யமான பார்வை, தாமரை போன்ற மென்பாதம், அந்த உருவத்தின் அருகில் நின்றாலே ஆனந்தம், அவரை நினைத்த மாத்திரத்திலேயே துன்பம் போகும்.

அவர்தம் ஆன்மீக ஆணையை, அநுக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் அநந்தம்! அநந்தம்!! பஜனை வழிமூலம் பக்தி ஊட்டும் சுவாமிஜியின் பணி மிகப்பெரியது. அவரது சமாஜத்திலே தெய்வீக அலை வீசுவதை அங்கு செல்பவர்கள் நன்கு உணர முடியும். பூர்வபுண்ணிய பலனால் அவருடன் தமது வாழ்வை பிணைத்துக்கொண்டோர், பெரும் பயன் பெற்றோராவர்.

நினைத்தவுடனே நெஞ்சு குளிர்விக்கும் சுவாமிஜியின் அருளாசிகள் என்றென்றும் எம்மை வழி நடத்துவதாக!

அவனருளாலே அவன்தாள் பணிவோம்!

---

இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர்

## பி. பி. தேவராஜ் அவர்களின்

## அநுதாபச் செய்தி

கடினமான தவங்களை ஆற்றித் தெய்வீக புருஷராகத்திகழ்ந்த சுவாமி கெங்காதரானந்தா அவர்கள், இந்து தர்மத்தை நிலைநிறுத்த வாழ்ந்து காட்டிய அருட்துறவியாவார். மிக எளிமையோடு எவ்வித தன்னலமுங் கருதாது அடியவர்களின் குறைகளைத் தீர்த்து வைத்தவர். சுவாமிஜி அவர்களை ஒருதடவை நினைத்தவுடனே அல்லது அவருக்கு கடிதம் எழுதிய வுடனே பலரது பிரச்சனைகள் தீர்ந்திருக்கின்றன. தனது பேரருளாலும், பெருங்கருணையினாலும் பிறரது துன்பங்களையும், நோய்களையும் தானே ஏற்றி வருந்தியவர் அவர். அத்தகைய ஒரு மகானின் மறைவு, இந்துக்களுக்கு மட்டுமன்றி முழு மனித சமூகத்துக்குமே எண்ணிப்பார்க்க இயலாத இழப்பாகும். சுவாமிஜிசமாதி அடைந்து விட்டாலும், அவர் தம் சைதன்ய சக்தி எங்கும் பரவி நின்று, அனைவரையும் காக்கும் என்ற நினைப்பு நமக்கு தெம்பு தருகின்றது

# கழுவாய்

கழுவாய் என்பது செய்த பாவத்துக்கு மன்னிப்புக் கோருதலாகும். அஃது ஒரு வகையில் பிராயச்சித்தமுமாம். பச்சாத்தாபப்படல், இரங்குதல் என்பனவோடு செயலிலும் சில கிரியைகள் செய்தல் பிராயச்சித்தமாகும். இன்னும் அதை ஒருவகை சாந்தி என்றும் கூறலாம்.

பிரதிட்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தம் என்னும் தொடர் திருக்கோயில் கிரியை பூனசவிழா என்பன சம்பந்தமாக வரும் குறைகளை ஈடுசெய்வதற்குச் செய்யும் கிரியையே பிராயச்சித்தம்.

திருக்கோயிற் கருமங்களில் மந்திரங்கள் கிரியைகள், பாவனைகள், படையல்கள் திரவியங்கள் குறைவுபடாமல் லோபமில்லாமல் செய்தல் ஆகமவிதி. குறைவு காத்திராப் பிரகாரம் தற்செயலாயுண்டாயின் கழுவாய் தேடிக்கொள்ளலாம் என்பது நம்பிக்கை.

அவசரமந்திரம், குறைபட்ட மந்திரம், உச்சரிப்புத் தவறான மந்திரம், அவசரக்கிரியைகள், குறைவான திரவியங்கள், பாவனைமூலம் படையல்கள் எல்லாம் லோபமேயன்றிப் பாவமுமாம். இவை எதிர்ப்பலனை உண்டாக்கும். இன்ன குற்றத்துக்கு இன்ன தண்டனை என்று தண்டக்கோவை கூறும் வகையில் இன்ன பாவத்துக்கு இன்ன கழுவாய் என்று கூறும் ஆகமவிதிகளும் உள்ளன.

சைவசித்தாந்தங் கூறும் வகையில் எங்கள் பழைய பாவங்கள் சஞ்சிதக் குவியலாகச் செய்தவர் பெயரில் வங்கிக் கணக்குப்போல இருக்கும். வங்கிக் கணக்கைப் பிரதியாள் தொடர்ந்து அனுபவிக்கலாம். ஆனால் சஞ்சிதத் தொடர்பைச் செய்தவரே அனுபவித்தல் வேண்டும்.

அந்தச் சஞ்சிதமும் முற்றாக அனுபவிக்க முடியாதது. எனவேதான் பிறவிதோறும் அதனைச் சிறு தொகுதியாகப் பிராயச்சித்தம் என்னும் பெயரில் அனுபவிக்கிறோம். ஆனால் அதை ஒரே பிறப்பில் தீர்த்துவிட வேண்டுமானால் தக்க குருவை அடைந்து அவர் உதவியால் பழைய பாவத்தை முற்றாக நீக்கி சாம்பராக்கிவிடலாம். அது குருவருள். பாவமன்னிப்பு எனவும் பிறரிடம் வழங்குவது.

புத்த சமயத்தில் பாவமன்னிப்புக் கிடையாது. பாவம் செய்தவர் அதனை அனுபவித்தல் வேண்டும். பழைய மன்னன் இராசசிங்கன் தன் தந்தைக்குச் செய்த பாவத்தை நீக்கவழி என்ன என்று பிக்குமாரிடம் கேட்டான். அவர்கள் பாவமன்னிப்புக் கிடையாது என்றனர்.

நன்றி — மில்க்வைற் செய்தி

## இந்துத் தத்துவத்தின் . . .

( 2ம் பக்க தொடர்ச்சி )

5. கர்மவினைகளை முற்றாகத் தொலைக்கும்வரை மறு பிறவிகள் தொடர்ந்து கொண்டிருக்கும் என இந்து மதம் தெட்டத்தெளிவாக வலியுறுத்துகின்றது.

6. எமது சிந்தனை, சொல், செயல் என்பவற்றை புனிதப்படுத்திக் கொள்வதற்காகவே கோயிற் பூஜை, யாகம், தியானம், யோகம் போன்ற பல்வேறு, முறைகளை நாம் மேற்கொள்கின்றோம்.

7. மனக் கட்டுப்பாடு, ஒழுக்கமுள்ள நடத்தைபோன்றவற்றோடு ஒரு சற்குருவின் வழிகாட்டலிலே எமது எண்ணங்களை நாம் தூய்மைசெய்து கர்ம பலன்களை குறைத்துக் கொள்ளலாம்,

8. அனைத்தும் இறைவனின் படைப்புக்களே, எனவே, பேதம் பாராட்டாது, மனிதர்கள் மீதும் ஏனைய படைப்புக்கள் மீதும் அன்பு செய்யும் போது, நாம் இறைவனுக்குகந்தவர் ஆகிறோம்.

9. ஒரே உண்மையை பல மதங்களும் பலவாறு உரைக்கின்றன. கருணை உணர்வுடன் பிறருக்கு, நினைப்பாலோ, செயலாலோ தீங்கு செய்யாத எல்லோரும் இறைவனின் அருட்குழந்தைகள். இறைவன் சந்நிதியில் பேதங்கள் எதுவுமே இல்லை.

நன்றி — கோபுரம்

# கிடைக்கப் பெற்றோம்

சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை, துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஜே.பி. அவர்களின் பிறந்தநாள் அறநிதியமாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள ''சைவக் கிரியைகளும் விரதங்களும்'' என்ற நூலும், யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிற்சாலை பேரறிஞர் க.சி. குலரத்தினம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளியிடும் ''இந்து நாகரிகம்'' இதழ்களும் கிடைக்கப் பெற்றோம் — நன்றி.

விமர்சனம் அடுத்த இதழில் இடம்பெறும்.

# என் குருநாதா!

ஞான ஒளிபெருக்கி ஞான அருள் பொழியும்
ஞான வள்ளலே என் குருநாதா

சுவாமி கங்காதரானந்தா

என் உள்ளமே அவர் வாழும் ஆலயமே
உயிர் உருவமுள்ள பேசும் தெய்வமே
நான் காணும் காட்சியும் அவர் உருவமே
என் காதுகள் கேட்பதும் அவர் உபதேசமே

(ஞான ஒளிபெருக்கி)

வா என்று சொன்னால் இன்பம் பொங்குதே
போ என்று சொன்னால் துன்பம் போகுதே
மௌனமாக இருந்தாலும் கண்கள் பேசுதே
கை கூப்பினால் உங்கள் உள்ளம் பேசுதே

(ஞான ஒளிபெருக்கி)

அடியார்கள் துன்பம் ஏற்கும் தீபமே
அன்பர்கள் போற்றும் தெய்வ வள்ளலே
எல்லாம் அறிந்த அருள் ஞானியே
உங்கள் பாதமே கதி எங்கள் குருநாதரே

(ஞான ஒளிபெருக்கி)

(திருகோணமலை, சிவயோக சமாஜத்து பஜனை யில் ஒலிக்கும் குருவணக்கப்பாடல்)



அமரர் ஓதுவார் மணியம்

இவரைப்பற்றிய நமது அஞ்சலியை 18ம் பக்கம் பார்க்கவும்.

( 8ம் பக்க தொடர்ச்சி )

## மனம் கெட்டால்...

மனிதர் சர்வ சக்திகளையும் உபயோகித்து நற் குணங்களை விருத்தி செய்யவேண்டும்.

### உபத்திரவங்கள்

துர்க்குணம் உடையவர்கள் வாழுகின்ற இடங் களில் பெரும் உபத்திரவங்கள் நிகழுகின்றன. இது தான் இன்றைய உலகநிலை.

மென்மேலும் மனக்கசடுகள் வளர்ந்துகொண்டே போனால் மனிதனுக்கும் விஷக்கிருமிகளுக்கும் அதிக வித்தியாசமில்லாது போய்விடும்.

நமது உணர்வு மாற்றத்திற்காகக் காலம் காத்து நிற்பதில்லை. இனியாவது மனிதர்கள், சமுதாயம் போய்க்கொண்டிருக்கும் பாதையைப் பற்றிச் சரியான அறிவுடையவர்களாகாவிட்டால் எதிர்காலம் அமங் கலகரமான பல சம்பவங்களால் பாதிக்கப்படும்.

மனிதருடைய துர்க்குணங்களே சாசுவதமான சுகத்திற்கும் சுதந்திரமான வளர்ச்சிக்கும் இடையூ றாய் இருக்கின்றன.

உலக சமுதாயத்தின் இரு பெருங் கண்களாகிய அரச தர்மமும், ஆத்மீக தர்மமும் அந்தரங்க சுத்தி யுடன் சரியான இலட்சியத்தில் செயல்பட்டால் உயர்ந்த சீலமுடைய ஒரு மனித சமுதாயத்தை உரு வாக்குவது சுலபமானதாகும்.

மனிதர் துர்க்குணங்களிலிருந்து முக்தராகுவது தான் உலக சமாதானத்திற்கும் மாயக் கலப்பில்லாத சாந்த மதுரமான வாழ்க்கைக்கும் ஏக மார்க்கம்.

எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனுக்குக் கோ வில் ஏன் என்று சிலர் கேட்கின்றனர். பரம்பொருள் எங்கும் பரந்திருக்கின்றதென்ற உணர்ச்சி எல்லோ ருக்குமிருந்தால் சூது, வாது, வஞ்சனை, பொய்கள் ஒன்றும் இருந்திருக்காது. மின் சக்தி எங்கும் பரந்திருந் தும் ஊனக் கண்களுக்குப் புலனாவதில்லை. சில ஆராய்ச்சியினால் இருக்கின்றதென்று அறியப்பட்டி ருக்கிறது. அருவமாயிருக்கும் மின் சக்தியைச் சில கருவிகளால் சேமித்து வைத்து அதற்கேற்ற உபகர ணங்கள் மூலம் நாம் நமது தேவைக் கேற்றவாறு உபயோகப்படுத்திக் கொள்ளுகிறோம். அதே போல் அருவ சக்தியாயிருக்கும் அருட் சக்தியைச் சேமித்து வைத்திருக்கும் அருள் நிலையம் ஆலயம். மந்திரம், தோத்திரம், அபிஷேகம், அர்ச்சனை முதலியன அருட் சக்தியைச் சேமிக்கும் கருவிகள். பிரார்த்தனை வழி பாடு தியானம் முதலியன, அந்தச் சேதனா சக்தியை நாம் பெறும் உபகரணங்களாகும்.

ஸ்ரீமத் கங்காதரானந்தா

# இரண்டு ஞானஜோதிகள்

திருமதி கனகாம்பிகை பரமலிங்கம்

எங்கள் அநுபவம் புதுமையானது 1971ம் ஆண்டு, எனது கணவர் புகையிரதநிலைய அதிபராக பண்டாரவளைக்கு மாற்றம் பெற்றதும், அங்கே குடும்பமாகக் குடி யேறினோம். அங்குதான் எமது ஆன்மீக வாழ்வுக்கு அடித்தளம் அமைந்தது. ஸ்ரீமத் ஜெகதீஸ்வரானந்தா என்ற இளம் ஞானியை அங்கே தரிசித்தோம். பெரிய சுவாமிஜி பற்றி நிறைய அவர் கூறினார். அதே வேளை அவரது பேரருளினால் எமது வாழ்வில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன.

கனவுகள் மூலம் அற்புதங்கள் நிகழ்ந்தன. பிள்ளைகள் கல்வியிலே சிறந்து விளங்கினர். நல்ல தொழில் வாய்ப்புகள் அமைமந்தன. குடும்பத்தில் அமைதி நிலவியது.

எமது இதயங்களைத் தூய்மை செய்து கொள்ள ஸ்ரீமத் ஜெகதீஸ்வரானந்தாவே ஞானவிளக்காக அமைந்தார்.

இருந்தும் அவர்தம் ஞானகுருவான ஸ்ரீமத் கங்காதரானந்தா எனும் தெய்வத்தை தரிசிக்க எமக்கு நீண்ட காலம் எடுத்தது. சரியாக ஒன்பது ஆண்டுகளுக்குப்பின் 1980ம் ஆண்டு ஸ்ரீமத் ஜெகதீஸ்வரானந்தா எம்மை குருதரிசனம் செய்யுமாறு பணித்தார்* குடும்பமாகச் சென்று கங்காதரானந்தரைக் கண்டோம். அதன்பின் இன்னும் ஆழமாக எம் அனைவரது வாழ்வையும் அந்த இரு ஞானியர்களிடமே ஒப்படைத்தோம்.

இன்றும் எம்மை அவர்கள் வழிநடத்துகின்றார்கள். ஸ்ரீமத் கங்காதரானந்தா மகாசமாதியுற்றாலும் அவரது வழியிலே ஞானோபதேசம் செய்ய ஸ்ரீமத் ஜெகதீஸ்வரானந்தா அவர்கள் விளங்குகின்றார்.

அலைகின்ற மனதுக்கு ஆறுதல் தரவும், எமது இதயங்களை தூய மலர்களாக ஆக்கி பூஜை செய்யவும் எம் வாழ்வில், இவ்விரு ஞானவான்களையும் நாம் காணக்கிடைத்ததை விடவும் வேறு பேறு என்ன வேண்டியிருக்கிறது?

உலகுள்ளவும், ஸ்ரீமத் கங்காதரானந்தா, ஸ்ரீமத் ஜெகதீஸ்வரானந்தா என்ற அருட் திருநாமங்கள் நின்று நிலைத்து வாழ்வதாக!

# தியாகச் செம்மல் ..

(7ம் பக்க தொடர்ச்சி)

திரு. ஆனந்ததியாகரின் முழுக்குடும்பமும் அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலிலும், கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்திலும் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். நால்வர் சமய பாடசாலை சமய வகுப்புகளில் சமயம் படித்ததோடு பின்னர் சமயவகுப்பு ஆசிரியர்களாகவும் பணியாற்றியுள்ளனர்.

சைவப் பெரியார் காலஞ்சென்ற திரு. என். பி. சதாசிவம் அவர்களும் அவரது தர்ம பத்தினியார் காலஞ்சென்ற தியாகமணி அம்மையாரும் தம் குழந்தைச் செல்வங்களை சைவ நெறிப்படி வளர்த்து ஆலய திருப்பணிகளையும் சைவ சமயப் பணிகளையும் செய்ய அர்ப்பணித்த பெருந்தகைகள் இருவரது ஆத்மாக்களும் சாந்தியடைவதாக.

திரு. ஆனந்த தியாகரும் அவர் உடன் பிறப்புகளும் சமயத்துக்கு தொண்டு செய்வதே தம் வாழ்வின் இலட்சியமாக கொண்டவர்கள். சைவமுன்னேற்ற சங்க தொண்டரணியிலும், நால்வர் மணமண்டபம் கட்டுவதற்கு ''பிடி அரிசி'' சேகரிப்பதிலும் ஒருவருக்கொருவர் மிஞ்சி நிற்பர். திருவெம்பாவை காலங்களில் திருவெம்பாவை பஜனை ஊர்வலங்களில் இவர்கள் முன் நிற்பர். கொள்ளுப்பிட்டிக்கே இந்த குடும்பம் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தது என்று சொல்லலாம். காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு. என். பி. சதாசிவம் அவர்களின் திருத்தொண்டை பின்னர் ஒருமுறை எழுதுவேன்.

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்திற்கு இலண்டனில் சங்கத் தலைமையகமும் கலாசாரமண்டபத்தையும் சொந்தமாக அமைத்துக் கொள்வதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர். BUILDING PROJECT ஒன்றையும் ஆரம்பித்திருக்கின்றனர். இந்த கட்டட திட்ட அங்குரார்ப்பணத்தன்று முருக பக்தர் பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள் பிரதம அதிதியாக வருகைதந்து ஆசியுரை வழங்கினார்.

கட்டடத் திட்டத்தை விளக்கி தலைவர் திரு. கு. சிதம்பரப்பிள்ளை, பொருளாளர் திரு. வ. இ. இராமநாதன், காப்பாளர் டாக்டர் வை. பாலசேகரம் பொதுச் செயலாளர் திரு. ஆனந்ததியாகர் முதலியோர் பேசினர்.

இக் கட்டடதிட்ட செயலாளராக பொறியியலாளர் திருமதி சி. தர்மராஜா பணியாற்றுகிறார்.

இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் தலைமையகத்தையும் கலாசார மண்டப திறப்பு விழாவையும் இலண்டன்வாழ் சைவ பெருமக்கள் மிக ஆவலோடு எதிர்பார்க்கின்றனர் நாமும் ஆவலோடு எதிர்ப்பார்க்கின்றோம்.

(மிகுதி அடுத்த இதழில்)

# சைவசமயம்

நந்தியின் சீடர்களான பதஞ்சலி சமஸ்கிருத பாசையில் இந்து சமயத்தின் கோட்பாடுகளையும், திருமூலர் சைவ சமயத்திற்கு அதே கோட்பாடுகளை தமிழ் மக்களுக்கு தமிழ் பாசையிலும் வகுத்து மனித சமுதாயம் உய்வதற்கு அளித்துள்ளார்கள். திருமூலர் சைவ சமயத்துக்கு ஆணிவேராய் நிற்கும் அறிவை, மந்திரத்தைக் கிழ்காணும் திருமந்திரத்தால் கூறுகின்றார்.

85. நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் வான் பற்றி நின்ற மறை பொருள் சொல்லிடில் ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம் தான் பற்றப் பற்றத்தலைப்படுந்தானே.

உடம்புக்குள் இயங்கும் உணர்வான ஆத்மசக்கரத்தை, ஐந்தெழுத்தை பஞ்சாட்சர மந்திரத்தை அறிந்து உணர்வதே சைவ சமயம்

சைவ சமயத்துக்குத் தனி நாயகன் தனது சற்குரு நந்தி யென்று பின் வரும் திரு மந்திரம் கூறுகின்றது.

1478. சைவப் பெருமை தனிநாயகன் நந்தி உய்ய வகுத்த குரு நெறி ஒன்றுண்டு தெய்வச் சிவநெறி சன்மார்க்கம் சேர்ந்துய்ய வையத்து ுள்ளார்க்கு வகுத்துவைத்தானே.

ஆத்மவஸ்துவைக் காட்டிக்கொடுத்த சற்குரு நந்தியின் பெயராலேயே அப்பொருளைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார். கருவில் மிதித்த கமலப்பாதம் விரிந்து ஆத்மசக்கரமாய் ஐந்தெழுத்தில் நின்று ஓமெனும் மந்திரத்தைக் கூறிக் கொண்டே இயங்குகின்றது. இதை அறியாமல் திருமந்திர மாகிய சிவாகமத்தையும் அதன் கோடிக்கணக்கான தொகுப்புகளையும் வாசித்துப் பாடியும் ஒரு பலனையும் பெற முடியாது.

64. அண்ணல் அருளால் அருளும் இவ்வாகமம் எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும் அண்ணல் அறைந்த அறிவு அறியாவிடின் எண்ணிலி கோடியும் நீர் மேல் எழுத்தே

ஆத்மாசிவனுடன் சம்பந்தமாவது உடம்புக்குள் இயங்கும் ஆத்மசொருபத்தை அறிந்தபிற்பாடே இயலும் என்று பின் வரும் திருமந்திரங்கள் விளக்குகின்றன.

1512. சைவஞ் சிவனுடன் சம்பந்தமாவது சைவந்தனை யறிந்தே சிவஞ்சாருதல் சைவஞ் சிவந்தன்னைச் சாராமல் நீவுதல் சைவஞ் சிவானந்தம் சாயுச்சியமே:

1559. சைவப்பெருமைத்தனிநாயகன் தன்னை உய்ய உயிர்க்கின்ற ஒண்சுடர் நந்தியை மெய்ய பெருமையர்க்கு அன்பனை இன்பம் செய் வையத்தலைவனை வந்தடைந்து உய்மினே

''சைவ சமயம் ஓர் உட்சமய மென்று திருமந்திரம் பல பாடல்களால் விளக்குகின்றது. உடம்புள் இயங்கும் ஆத்மாவே மெய்ப் பொருளாய், வேதப் பொருளாய் சகல அசைவு, அசைவற்ற, பொருள்களையும், படைத்து நிற்கிறது. இப்பொருளை அறிந்து தியான மூலம் உணர்ந்து அது அளிக்கும் அருளை அனுபவிப்பதே எமது சைவ சமயம் கூறும் சன்மார்க்கம்.''

மிகுதி அடுத்த இதழில்

திருமூலர் சங்கம் — கொழும்பு - 4.

# தெளிவு வேண்டும்

தங்கள் 19-11-90 வெளியீடு 16-1-91ல் கல்குடா சைவமகாசபைக்கும் கிடைத்தது. 17ம் பக்கத்தில் வெளியான அஞ்சலி, 58ம் ஆண்டிலிருந்து பலதரப்பட்ட மரணவிசாரணைகளை நடாத்தி கல்லாகிபோன என்மனதைக் கூட கனியவைத்து விட்டது.

அடுத்தடுத்து பாவங்களை தேடிச் செய்த ஒருநபர் கொடூரமான வகையில் கொலை செய்யப்பட்டிருந்தால் அவர் செய்த பாவங்கட்கு கடவுள் கொடுத்த தண்டனை என்கின்றனர்.

அடுத்தடுத்து மக்கட்கு நன்மையே செய்த மகாத்மாவைப் போன்றவர்கள் கொலை செய்யப்பட்டால் முற்பிறப்பில் செய்த பலன் என்கின்றனர். ஆனால் 'கடவுளைக்கண்டேன் குழந்தை வடிவிலே, என்று கண்ணதாசன் குழந்தைகளை கடவுளாக்கிபாடி விட்டார். ஆகவே எதுவும் அறியாத பச்சிளக்குழந்தைகட்கு இப்படி கொடூரமான சாவுவரக்காரணமென்ன என்று பலரிடம் கேட்டுவருகிறேன். எல்லோரும் தகுந்தபதிலை தருவதாக இல்லை.

தாங்கள் பல தத்துவ ஞானிகளைச் சந்தித்திருக்க முடியும். இந்த மரணங்களையிட்டு நம் முன்னோர்களின் நூலில் ஏதாவது கூறப்பட்டுள்ளதா என்பதை தங்கள் இந்து கலா சாரம் மூலம் வெளிப்படுத்தினால் பலருக்கு சந்தேகம் தீரும் என இக்கேள்வியை பணிவுடன் கேட்டு விடைபெற்று தங்கள் பதிலுக்காக காத்திருக்கின்றேன்,

— டாக்டர் கே. எஸ். காராளசிங்கம்
வாழைச்சேனை

●● உனது கெட்டித்தனத்தால் பலதும் சாதிக்கலாம். ஆனால் சாதித்ததை நிம்மதியுடன் சம்பூர்ணமாக அநுபவிப்பதற்குத் திருவருள் வேண்டும் என்பதை அறிக.

— சுவாமி கெங்காதரானந்தாஜி

# சமாஜமும் நாமபஜனையும்

— ம. சண்முகநாதன் —

திருகோணமலை, சிவயோக சமாஜத்திலிருந்து கொண்டு கடந்த நாற்பது வருடங்களுக்கும் மேலாக அருளாட்சி புரிந்த ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தாஜி அவர்களின் பக்தர் திருக்கூட்டம் பஜனை மேற்கொண்டு அமைதியும், மதுரமான சாந்த உணர்வும் மிக்க மனநிலையோடு உலவிவருகின்றது. இப்பஜனை நீண்ட காலமாகவே திருகோணமலையிலும், அதன் பின் மட்டக்களப்பில் திரு. ஜனார்த்தனன் அவர்கள் இல்லத்திலும், கொம்மாதுறை செங்கலடியில் சிவயோகசமாஜத்தின் கிளையான திரு. வீரராகவன் அவர்கள் இல்லத்திலும், கொழும்பில் பம்பலப்பிட்டி பிரான்ஸிஸ் மகாதேவா அவெனியூவில் தபால் நிலைய அலுவலர் திரு. கனகசிங்கம் அவர்கள் இல்லத்திலும் முறையாக நடைபெற்று வருகிறது. தற்போது அப்புத்தளை, திரு. இராமநாதன் அவர்கள் இல்லத்திலும் பஜனை தொடங்கப்பட்டுள்ளது.

பஜனையில் சுவாமி கங்காதரானந்தா அவர்களால் இயற்றப்பட்ட பல பாடல்களும், தோத்திரங்களும் முறையாக இசைக்கப்படுகின்றன. இவற்றின் விசேடமென்னவெனில், நாமசங்கீர்த்தனத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாகும்.

''எனது நாமத்தை உச்சரிக்கின்ற பக்தரின் இதயங்களிலேதான் நான் குடியிருக்கின்றேன்.'' என்ற இறைவாக்குக்கொப்ப, இறைநாமங்கள் அனைத்தையுமே இப்பஜனையில் பக்தர்கள் உச்சரிக்கின்றனர். எல்லாத்தெய்வத் திருநாமங்களும் இவற்றுள் அடங்குகின்றன.

ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்கள் காட்டிய நாம பஜனையில் கணபதி, சிவன், சக்தி, நாராயணன், முருகன் ஆகிய நாமங்கள் யாவுமே எவ்வித வேறுபாடுமின்றி ஒலிக்கப்படுகின்றன.

''ஓங்கார மந்த்ரார்த்த மூர்த்தே கணேஷா'' எனத் தொடங்கும் தோத்திரம், விநாயகப் பெருமானை ஓங்கார மந்திரத்தின் மூர்த்தமாக வழுத்துகின்றது. அவ்வாறே ''நமச்சிவாய, சாந்தாய, சுத்தாய பரமாத்மனே சச்சிதானந்த ரூபாய தட்சணா மூர்த்தயே நமஹ'' எனத் தொடங்கும் தோத்திரம், சிவபெருமானின் தட்சணாமூர்த்தி வடிவத்தை ஞாபகமூட்டும். அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெறவிழைகின்ற அடியார்கள் ''ஓங்கார ஸ்ரீதரியே'' என விளித்து ''பூர்வவினைத் தளையால் வாடித்தளர்ந்தேனம்மா; ஆரமுதத்தாயே என்னை வாரி அணைத்திடுவாய்; உன்னை அல்லாது மற்றார் யாரும் துணையில்லையே'' என்று அழுது அரற்றுகின்ற அருட்குரலை நாம் கேட்கலாம்.

அழகன் குமரனின் அன்பிலே திளைக்கவிரும்பும் ஆன்ம பக்தர்கள்,

''ஓம் முருகா, ஓம் முருகா, உன்னை நினைந்து
நினைந்து உருகி, உள்ளொளி காண்பது
என்றோ முருகா'' என்று முருக நாமத்தை

முறையே ஒலிக்கின்றனர்.

அவ்வாறே, ஜகத்குரு ஆதிசங்கராச்சாரியார் அருளிச் செய்த, பஜகோவிந்தத்தில் இருந்து,

''கோவிந்தம் பஜ, கோவிந்தம் பஜ
கோவிந்தம் பஜ கோவிந்தம்''

என்ற அடிகள் பக்தர் குழாத்திற்கு கோகுல கிருஷ்ணனின் லீலா விநோதங்களை நினைவுபடுத்தும். சுவாமிஜி அவர்களின் பஜனையிற் காணப்படும் மேலும் ஒரு சிறப்பு யாதெனில், வடமொழி, தமிழ் என்கிற பேதங்களின்றி இரண்டையும் இணைத்து இசைப்பதாகும். அப்பர் சுவாமிகள் அறுதியிட்டுரைத்த அந்த வரிகள் உள்ளங்களை நெகிழவைத்து கண்களை பனிக்கச் செய்கின்றன.

''அல்லல் என் செயும்? அருவினை என்செயும்?
தொல்லை வல்வினைத்தொந்தந்தான் என்செயும்?''

என்ற வினாக்களை தில்லைக் கூத்தனை மனதிலே கொண்டு வினவுகின்ற அப்பர் சுவாமிகள்.

''தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு எல்லை
யில்லதோர் அடிமை பூண்டானுக்கே''

என பதிலையும் இறுக்கின்ற தேவாரப் பாடலும் பஜனையில் இடம் பெறுகின்றது.

மாதம் இருமுறைவருகின்ற ஏகாதசி நாட்களில் சிவயோக சமாஜத்தின் சங்கத்தில், ஸ்ரீகிருஷ்ண அஷ்டோத்திர சதநாம ஆர்ச்சனை,

''வசுதேவ சுதம்'' எனத் தொடங்கும் கீதா சுலோகத்துடன் ஆரம்பிக்கின்றது. இவற்றால் வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் இப்பாடல்கள் வழிகாட்டுகின்றன.

சிவயோக சமாஜத்தின் ஆன்மீகப் பெருவெளியை அல்லது ஆழமான அருட்கடலைப்பற்றி அறிய நேர்ந்த பக்தகோடிகளுக்கு பூத பரம்பரை குறிக்கும் சித்தர்

( தொடர்ச்சி 19ம் பக்கம் )

# உனக்கென்ன குறை மனமே !

— திருமதி கனகசிங்கம் —

ஒருபோதும் கைவிடாத - நம்
ஞானகுரு இருக்க உனக்கென்ன குறை மனமே
இறைவனின் அருள் நிழல்தான்
நம் அருட் குரு என்றறிவாய்
கலங்காதே பதறாதே
உன்னை அவர் அறிவார்
ஒருபோதும்

அன்புடன் உனை அழைப்பார்
தன்முன்னாலே அமரச் சொல்வார்
அவர் அருள் ஒளி விழியால்
உன் கவலைகள் மறக்கச் செய்வார்
ஒருபோதும்

துன்ப துயரம் உனை
தொடர்ந்து வருத்தினாலும் - நீ
நம்பிக்கையுடன் அவர்
பாதம் சரணடைவாய்
ஒருபோதும்

கஷ்டங்கள் நஷ்டங்கள்
கவலைகள் எது வந்தாலும் - நம்
சற்குரு சந்நிதியில்
அவை பஞ்சாகப் பறந்திடும்
ஒருபோதும்

தீராத பிணி உன்னை
தீர வருத்தினாலும் - அதையும்
தான் ஏற்றுக் கொள்வார் நம்
அருட்குரு கெங்காதரன்
ஒருபோதும்

வாரா வினை வந்தாலும்
சோராதே என் மனமே - நம்
வல்ல குருநாதர்
நம்மோடிருக்கையிலே
ஒருபோதும்

வாழ்வில் இருள் அகற்றி
வாழும் வகை சொல்லுவார் - நம்
கர்மவினைகள் யாவும்
களையும் வழி கூறுவார்
ஒருபோதும்

அறிவுரை சொல்லுவது
அவர் கருணை - அதை
அறிந்து நடப்பது
மனமே உன் கடமை
ஒருபோதும்

(கொழும்பு பஜனையில் இடம் பெறும் பாடல்)

சரணாகதிக்கு ஒரு . . .

( 5ம் பக்க தொடர்ச்சி )

தான் அறிந்துணர்ந்த சத்திய உண்மையைச் சொல்கின்றபோது கண்கள் அகல விரியும். தனது சத்குருவைப்பற்றிக் கூற வார்த்தைகளைத் தேடுவார்-முடியாத போது "அவர் மகாஞானி; பெரிய மகான்; தெய்வம்" என்று கூறி முடித்துக் கொள்வார்; ஆம் அதற்கு மேல் வார்த்தைகள் தேவையில்லைதான். அவர் கூறியவை அத்தனை அர்த்தம் நிறைந்தவை.

பெரிய சுவாமிஜியைப் பற்றி அறிந்தவர்கள் எல்லோரும் சின்ன சுவாமிஜியையும் நன்கறிவார்கள். பெரிய சுவாமிஜி மகா சமாதி அடைந்த போது, ஒரு சிறுகுழந்தைபோல அழுது கதறியதைக் கண்டே அழுத பக்தர்கள் ஆயிரக் கணக்கானோர். தாயினும் சாலப் பரிந்து, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்த தெய்வீகக் குருவின் சமாதியை தாளமுடியாத துயரத்தோடு அநுபவித்தமையை நாம் கண்டோம். ஆனால் அது ஒரு சாதாரண மனிதனின் லௌகீகத்துயரமாக நமக்குப் படவில்லை.

பெரிய சுவாமிஜியின் சமாதிக்குப் பின்பும் அவர் தம் ஆன்மீக நெறியை உணர்த்தவும் காட்டித்தரவும் சின்ன சுவாமிஜி இருக்கிறார். அதுவே பலநூறு பக்தர்களுக்கு தெம்பு தரும் செய்தி.

தற்போது, தளர்ந்த வயதோடிருக்கும் தனது அன்னையாரோடு, பிரபலமோ, விளம்பரமோ கருதாது பண்டாரவளையில் அமைதியோடு இருக்கிறார் ஸ்ரீமத் ஜெதீஸ்வரானந்தா! அந்த இளந்துறவியின் அடிபணிந்து, உலகம் தனது ஆன்மீக தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுமாக!

## சந்தா விபரம்

1991ம் ஆண்டு தைத் திங்கள் முதல் இந்து கலாசார இந்து சமய திங்கள் இதழின் சந்தா விபரம் பின் வருமாறு.

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 75.00 |
| ஆயுள் சந்தா | ரூ. 1000.00 |
| தனிப்பிரதி | ரூ. 5.00 |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

நிருவாகி
இந்து கலாசார மன்றம்,
39/23, நெல்சன் ஒழுங்கை
கொழும்பு-3.

# ஓதுவார் மணியம்

— ஆர். வைத்திமாநிதி —

கொழும்பு மாநகர எல்லைக்குள் இருக்கும் அநேகமான எல்லாக் கோவில்களிலும் - ''வசந்தமண்டப'' தீப ஆராதனைகள் நடந்து, குருக்கள் அவர்கள் ''பஞ்சபுராணம் பாடி அருளுக'' என்று கூறிய உடன், ஒரு சிறு மனிதர், கருத்த நிறம், கழுத்தில் உருத்தராட்சம், நெற்றியில்விபூதியுடன் கட்டைக்குரலில்,கணீர் என்று தேவாரங்களைப் பாடி வந்தவர். மதிப்புக்குரிய ''மணியம்'' அவர்கள்.

கடந்த முப்பது, நாற்பது வருடங்களாக இவரை பல கோவில்களில் திருமுறைப் பாடல்கள் பாடக் கேட்டு இருக்கின்றேன். அதிலும் குறிப்பாக செட்டியார் தெரு பிள்ளையார் கோவில், தட்டாரத் தெரு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், துர்க்கை அம்மன் கோவில், தீவுக் கோவில் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

இப்படியாக தேவாரம் பாடும் பணியில் ஈடுபட்டுவந்த தொண்டர், தட்டாரத்தெருவில் துர்க்கை அம்மனுக்கு ஆலயம் எழுப்பி, அன்னை பராசக்தியை பராமரித்தும் வந்தார்.

இப்பெரியவர் அண்மையில் இறைவன் அடி சேர்ந்து அங்கும் தொடர்ந்து திருப்பணி செய்ய அழைக்கப்பட்டுள்ளார்கள்.

ஓதுவார் மணியம் அவர்களுக்கு எங்களின் அஞ்சலி.

---

## பேசாத நாளெல்லாம் . . .

(4ம் பக்கத் தொடர்ச்சி)

காக நடக்கும் சண்டைகளும், வழக்குகளும் கோயில்களின் புனிதத் தன்மையைப் பாழடித்துள்ளன. அதுவும் அரச பதவிகளிலிருந்து ஓய்வுபெறும்போக்கு அதிகப்பட, அதிகப்பட இந்தப் பிரச்சினை கிராமமட்டங்களை உலுப்பத் தொடங்கி விட்டது.

இது ஒருபுறமாக, இன்னொரு புறத்தில், இருக்கின்ற கோயில்களில் முதலிடம் இல்லை என்பதால், பழைய, சிறு கோயில்கள் ''பெரிய'' ஆகமக் கோயில்களாக மாறுவதும், இந்த மாற்றத்தின் சின்னமாகக் கும்பாபிஷேகங்களும், மகா கும்பாபிஷேகங்களும் செய்யப் பெறுவதும், அந்தக் கும்பாபிஷேகங்களுக்கான அழியாத சான்றுகளாகக் கும்பாபிஷேகமலர்கள் வெளியிடப் பெறுவதும் தெரிந்தவையே.

இவற்றுக்கு மேலாகக் கோயில்களின் சிறப்பு உயர, உயர அவற்றின் முகாமைகள் காட்சிப் பொருள் நிலையிலிருந்து கருத்துப் பொருள் நிலையாக ''மறைநாண''ப்பட்டு நிற்பதும் இன்னொரு பண்பு.

இத்தகைய ஒரு சமூக, அதிகாரச் சூழலிலே, கோயில் முகாமையாளர் என்ற வகையில் முதல் அடியாராகவும், முன் அடியாராகவும் நின்று தொழிற்பட்டு, அதே வேளையில் நவீன உலகின் நிர்ப்பந்தங்களை மனம் கொண்டு, கோயிலை ஒரு காத்திரமான சமகால நிறுவனமாக ஆக்கும் பணியை அற்புதமாகச் செய்துள்ளார் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார்.

இது அவர் ஒரு பெண்ணாக இருப்பதனாலேயே சாத்தியமாயிற்று என்றும் சொல்லலாம். யாழ்ப்பாணத்துச் சமூக அதிகாரத்தில் தோய்ந்து போகாது அதேவேளையில் பெண்மையின் தேவைகளைத் தாய்மையின் நோக்கிற் பார்த்துத் தமக்கையாக நின்று வழிநடத்தி இன்று ''அம்மா''வாக கனிந்துள்ளார் இவர்.

இவருடைய மிகப் பெரிய சாதனை, துர்க்கையம்மன் கோயிலை ஒரு கோயிலாக மாத்திரமல்லாமல், சமூக மையமாக நடத்திவருவதாகும்.

பெண் குழந்தைகளுக்கான விடுதி (விடுதியா அது வீடு: வீட்டிலும் பார்க்க மேலானது), சைவ இலக்கியங்களை வெளியிடுவதற்கான ஓர் அச்சகம்,வாசித்துப் படிப்பதற்கான (அரட்டைக்கானது அல்ல) ஒரு நூல் நிலையம், மத்திய வயதுப் பெண்களுக்கான கூட்டுறைப்புச் சபை, பிரதேசத்து இளைஞர்களை ஒருங்கிணைத்து அவர்கள் ஆற்றல்களை இறைபணிக்கு ஆற்றுப்படுத்தும் வாலிபமன்றம். இவையாவும் தங்கம்மா அப்பாக்குட்டி என்ற சைவப்பிரசாரகரால் இன்று நடைமுறைக்கு வந்துள்ளவை.

எத்தனை பெரிய சேவைகள்! எத்துணைப் பெரிய மாற்றங்கள்!

சமூக அதிகாரவேட்கையாலும், அறிவின்மையாலும் இறுகிப்போய் கிடந்த யாழ்ப்பாணத்துச் சைவ ஒழுங்கமைப்பு இளகத் தொடங்கியுள்ளது.

அது ஒரு அம்மன்கோயிலிலும், ஒரு பெண்மணியின் முகாமையிலும் நடப்பது காலத்தின் போக்கை உணர்த்துகின்றது.

அந்த அம்மையாரின் அறுபத்தேழாவது பிறந்த நாள், அவரை வாழ்த்துவதற்கும் நம்மைச் சிந்திக்க வைப்பதற்குமான நாள்.

அவர் நீண்டகாலம் வாழவேண்டும் என்பது இன்று சைவத்தின் தேவை.

நன்றி—முரசொலி

---

● மூட்டைப்பூச்சியைப்போல் பிறரைத் துன்புறுத்தி வாழக்கூடாது. கரையான்களைப்போல் பிறர் பொருளை நாசப்படுத்தி வாழக் கூடாது. தேனீயைப் போலவும், எறும்பைப்போலவும் உழைத்து உழைத்து உண்ணுவதே அமைதியான வாழ்க்கையாகும்.

— கிருபானந்த வாரியார்

---

## சமாஜமும் நாமபஜனையும்

(16ம் பக்கத் தொடர்ச்சி)

கள் வழியில் தலை சிறந்த சித்தராக ஸ்ரீமத் சுங்காத ரானந்தா விளங்கினார் என்பது அநுபவபூர்வமான உண்மையாகும்.
சித்தர் பெருமையை உணர்த்தும்,

''சிவயோக சித்தகலை கண்டுதெளிந்து
சிவத் தெளிவார்ந்த
சிவயோக சித்தர்கள் உண்ணும்
சிவாமிர்த மதுரமே.

என்ற பாடலும் இப்பஜனையில் இடம் பெறுகின்றது. நாம பஜனையின் மகத்துவம் பற்றி சுவாமிஜி அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளமை இவ்விடத்தில் மீட்டற்குரியது.

''நாம பஜனை என்று கூறப்படுவது,

பக்தர்கள் யாவரும் புனிதமான இடத்தில் ஒன்று கூடி அமர்ந்து, உள்ளத்தூய்மையுடனும் உள்ளக் கசிவுடனும் உருகி, இறைநாமத்தை உச்சரித்துக் கொண்டிருத்தல் ஆகும். உள்ளக்கசிவில்லாத நாமஸ்மரணை வெறும் சொற்களை உச்சரித்ததாகவே முடியும். நாங்கள் உள்ளத்தில் நெகிழ்வுடன் நாமபஜனையைப் பாடும்போது எமது உடலில் உள்ள எழுபத்தீராயிரம் நாடி நரம்புகளையும் தட்டி எழுப்பி, எம்மை இறையருளிலே அமிழ்த்திவிடும் தன்மை இறைவனின் திருநாமங்களுக்கு உண்டு.''

''ஹரி நாராயணா என்ற நாமத்தை உச்சரிக்கும் போது அந்த நாமஸ்மரணை ஆன்ம ஈடேற்றத்தை, முக்தியை வேண்டியொலிக்கப்படுகின்றது. 'கோவிந்தா' எனும் நாமம் சகல ஐசுவரியங்களையும் கொடுக்கும்படி கேட்கப்படுகின்றது. இப்படியான பஜனையின் ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு ஆழமான கருத்தைக் கொண்டிருக்கின்றன. நாம பஜனையின் மகிமைபற்றி,நாம பஜனையினாலேயேமுக்திஅடைந்த 'சபரி'என்ற பெண்ணின் கதை எமக்கு நன்கு உணர்த்தும்''

எனக் குறிப்பிடுகின்றார் சுவாமிஜி அவர்கள்.

சுவாமிகளின் பஜனையிலே ஈடுபடுவது மனதிற்கு அளவற்ற அமைதியைத் தருகின்றது.உண்மையாகவே இப்பஜனையிற் கலந்து கொள்பவர்கள் பெரும் பேறு பெற்றவர்கள். இப்பஜனையைப் பற்றி அறிந்து கொண்டவர்களும்,புண்ணியம் செய்த ஆத்மாக்களே. இந்த அருளுணர்வு மிக்க பஜனையில் கலந்து நாமஜெபத்தால் அவலமும் துன்பமும் அகல வழிகோலுவோமாக.

சிவயோக சமாஜ

# பஜனை நடைபெறும் இடங்கள்

திருகோணமலை — சிவயோக சமாஜ மண்டபம், திரு. பி. விமலநாதன் அவர்கள் இல்லம்.

கொழும்பு — திரு. சி. கனகசிங்கம் அவர்கள் இல்லம் திரு. சற்குணநாதன் அவர்கள் இல்லம், பிரான்ஸிஸ் மகாதேவா அவெனியூ, பம்பலப்பிட்டி.

மட்டக்களப்பு — திரு சி. கே. ஜனார்த்தனன் அவர்கள் இல்லம், பன்டிங்ஸ் லேன்.

செங்கலடி — திரு. பி. வீரராகவன் அவர்கள் இல்லம், கொம்மாதுறை.

யாழ்ப்பாணம் — திரு. பி. பரமலிங்கம் அவர்கள் இல்லம், மாதர்சங்க லேன் சித்தன்கேணி.

அப்புத்தளை — திரு. கே. இராமநாதன் அவர்கள் இல்லம், தமிழ் மகாவித்தியாலயம்.

லண்டன் — திரு. ஜெயபாலா அவர்கள் இல்லம், 16, பிரான்ஸிஸ் ரோட் பெரிவேல், கிரீன்போட் மிட்டில் செக்ஸ்.

## யாம் பெற்ற இன்பம்

(6ம் பக்க தொடர்ச்சி)

எமது வீட்டிலே நிகழும் பஜனைக்கு ஒரு முறையாவது வந்து தரிசனம் தருமாறு சுவாமிஜியை நாப் வருந்தி வேண்டினோம். சிலநிமிடங்கள் மௌனமாக இருந்தபின் ''எனக்கு வரும் நேரம் தெரியும். நிச்சயம் வருவேன்'' என்று கூறினார். அவர் மறைந்து சமாதியானபின் அவரது புனிதவுடல் எமது வீட்டிலும் சில மணி நேரங்கள் வைக்கப்பட்டபோது, அவர் கூறிய தன் உண்மை புரிந்தது.

உலகமெல்லாம் பரந்து வாழ்கின்ற சுவாமிஜியின் ஆத்மார்த்த பக்தர்களோடு நாமும் இணைந்து கொள்கின்றோம். எமது வாழ்க்கையை சுவாமிஜியின் பாதங்களிலே அர்ப்பணிக்கின்றோம். நாம் கண்டு பேசிய அந்த தெய்வத் திருவுருவம் மறைந்து விட்டாலும் எங்கும் நிறைந்திருக்கின்ற அவர்தம் ஞானசக்தி அனைவருக்கும் வழிகாட்டும் என்று பரிபூரணமாக நம்புகின்றோம்!

சுவாமிஜி என்ற அந்த ஞானவிருட்சத்தின் திருப் பாதமலர்களுக்கு, எமது, பணிவும் தாழ்மையும் நிறைந்த அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்! பிரார்த்திக்கின்றோம்!!

*With Best Compliments*

*of*

RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS IN ALL KINDS OF

ALUMINIUM WARES

**170 - 172 OLD MOOR STREET COLOMBO-12**

Telephone : **35579**

இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/23ட
இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி என்பவரால், கொழும்பு-1
ஜெம்பட்டா வீதி ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் 15-03-1991ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.